Registered as a News Paper in Sri lanka


விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO
RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சிமெந்து (O.P.C) ராம்கோ சிமெந்து
(C/1283)

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2042 மாசி 22 திங்கட்கிழமை (05.03.2012) பக்கங்கள் 16 ஓசை – 156


உயிரினங்களின் முன்னெச்சரிக்கை
06


மனம் கவர்ந்த கண்காட்சி
14


நியாயமற்ற கோரிக்கை
08


வசதி குறைந்த முன்பள்ளி
05

# சிறுமி படுகொலை சந்தேகநபர் கைது

## நெடுந்தீவில் பதற்றம்



(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பாடசாலை மாணவியை பாலியல்லுறவுக்குட்படுத்திய பின்னர் படுகொலை செய்தாரெனத் தெரிவிக்கப்படும் சந்தேகநபர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நெடுந்தீவு பகுதியில் குறித்த நபர் தங்கியிருந்த நிலையில் பொதுமக்கள் இவரைப் பிடித்துத் தாக்கியதாகவும், அவர்களிடமிருந்து தப்பிப்பதற்காக பொலிஸ் நிலையத்தில் இவர் சரணடைந்ததாகவும் மற்றொரு தகவல் தெரிவித்தது. இவ்வாறு கைதுசெய்யப்பட்ட நபர் மானிப்பாயை சொந்த இடமாகக் கொண்டதுடன், திருமணம் செய்து நெடுந்தீவில் வசித்து வருபவருமான 2 பிள்ளைகளின் தந்தையான (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஈனச்செயல் புரிந்த நபரை கடுமையாகத் தண்டிக்க வேண்டும்

## ஈ.பி.டி.பி. கண்டனம்



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 12 வயது பாடசாலை மாணவி ஒருவர் மிகக் கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் அனைவர் மத்தியிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளதுடன், இத்தகைய கீழ்த்தரமான செயற்பாடுகள் அதிகரித்து வருவதற்கு மிதமிஞ்சிய மதுப்பாவனைக்கும் போதை வஸ்துக்கு அடிமையானவர்களுமே காரணமென ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி கடுமையான கண்டனத்தைத் தெரிவிப்பதாக கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்) விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (15 ஆம் பக்கம் பார்க்க)

# அத்துமீறும் மீனவர் விவகாரம் அமைச்சர் தலைமையில் ஆராய்வு

## கச்சதீவு உற்சவத்தில் மீனவர்கள் சந்திப்பு



(கச்சதீவு)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கைகளினால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதுடன் பெருமளவான சொத்து இழப்புகளும் ஏற்படுவதாக வடபகுதி மீனவர்கள் தெரிவித்துள்ள அதேவேளை தொழில் நிமித்தம் தாம் கடல் எல்லையை தாண்டும் வேளை இலங்கை கடற் படையினரால் தாக்குதலுக்குள்ளாவதாகவும் இதனால் தமது தரப்பில் 400 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் உயிரிழந்து விட்டதாகவும் இந்திய மீனவர்கள் தெரிவித்தனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய வளாகத்தில் நேற்றுமுன்தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்திய மற்றும் இலங்கை வடபகுதி மீனவர்களுடனான சந்திப்பின் போது மேற்கண்டவாறு இருபகுதி மீனவர்களும் தெரிவித்தனர்.

இவர்களின் கருத்துக்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் றோலர் மீன்பிடி போன்ற தொழில் நடவடிக்கைகளால் (15 ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியல் கட்சி ஆரம்பிக்கும் பொன்சேகா

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளார். புதிய கட்சியை பதிவு செய்யும் நடவடிக்கைகள் அடுத்த மாதத்தில் மேற்கொள்ளப்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான டிரான் அலஸ், ஜயந்த கெட்டகொட உள்ளிட்டோர் கூட்டாக இணைந்து கட்சி அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

கூட்டணி கட்சியொன்றில் அங்கம் வகிப்பதனை விடவும் தனித்துவ அடையாளத்துடன் அரசியல் கட்சி ஒன்றை அமைப்பதே தமது நோக்கம் என அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# விசுவமடுவில் குண்டு வெடித்து சகோதரர்கள் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறிய தாயார் கொடுத்த குண்டை நிலத்தில் வீசியெறிந்த சிறுவனும், அவனது சகோதரியும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விசுவமடு தேராவில் பகுதியில் நேற்று நண்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வீராசாமி வள்ளுவன் (வயது - 16), வீராசாமி கோகிலா (வயது - 22) ஆகிய இருவருமே படுகாயமடைந்தவர்களாவர். இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஆட்டுக்கு குழை வெட்ட காட்டுப்பகுதிக்குச் சென்ற சிறிய தாயார் குறித்த வெடிபொருளை (15 ஆம் பக்கம் பார்க்க)

# மனித உரிமைக் கூட்டத்தில் பங்கேற்க கூட்டமைப்பிற்கு அனுமதியில்லை

## இப்படிக் கூறுகிறார் மாவை

(ஏழாலை)

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் பங்கேற்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது. இதன் காரணமாகத்தான் நாம் ஐ.நா.வின் ஜெனிவா நிகழ்வுகளுக்குச் செல்லவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஏழாலை அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மாவை சேனாதிராசா இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனிவாவுக்கு செல்லவில்லை என்று தற்போது தமிழ் மக்கள் மத்தியில் கூறுவதில் எந்தவகையான உண்மைகளும் இல்லை. நாம் எமது பணியை மக்கள் எமக்களித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக உரிய முறையில் மேற்கொண்டே வருகின்றோம். இது சம்பந்தமாக நாம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் கூடி உரிய விளக்கத்தை எம்மவர்கள் (15 ஆம் பக்கம் பார்க்க)

# வெளியுறவுக் கொள்கைப்படியே இந்திய அரசு முடிவினை எடுக்கும்

## காங்கிரஸ் பொதுச் செயலர் தெரிவிப்பு

(புதுடில்லி)

இந்திய அரசு தற்போது பின்பற்றிவரும் வெளியுறவுக் கொள்கைகளுக்கு ஏற்பவே ஜெனிவா விவகாரத்தில் முடிவெடுக்கும் என்பதுடன் இதுநாள்வரை இலங்கை விவகாரத்தில் எத்தகைய அணுகுமுறையைப் பின்பற்றி வந்தது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டுமென காங்கிரஸ் கட்சியின் பொதுச்செயலாளர் ஜனார்த்தனன் திவேதி தெரிவித்தார்.

இந்திய காங்கிரஸ் கட்சியின் செய்திப்பிரிவின் தலைவருமான திவேதி இது தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது,

இந்திய அரசின் வெளியுறவுக் கொள்கைகள் மற்றும் வெளிநாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் தொடர்பில் மத்திய அரசு எடுக்கும் முடிவுகளில் நாட்டில் உள்ள (15 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கை விவகாரம் குறித்து ஆறாம் திகதி கலந்துரையாடல்

(ஜெனிவா)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரம் தொடர்பிலான கலந்துரையாடல் எதிர்வரும் 6 ஆம் திகதி இடம்பெறவுள்ளது. இதன்படி பொறுப்புக் கூறுதலும், தீவிரவாத முறியடிப்பும் என்ற கருப்பொருளில் இந்த விவாதம் இடம்பெறவுள்ளதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்றதாகக் (15 ஆம் பக்கம் பார்க்க)

# சிறப்பாக நடைபெற்ற கச்சதீவுப் பெருவிழா





(கச்சதீவு)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றுள்ளது.

இத்திருவிழாவிற்கு யாழ். மாவட்டத்திலிருந்து செல்லும் மக்களின் நலன் கருதி சகல ஏற்பாடுகளையும் கடற்படையினரும் வேலணை, ஊர்காவற்றுறை, நெடுந்தீவு பிரதேச சபைகளும் இணைந்து மேற்கொண்டனர்.

குறிப்பாக அனைத்து படகுச் சேவைகளும், படகு உரிமையாளர் சங்கங்கள் ஊடாக வடதாரகை படகு மூலம் மிக விரைவாக மக்களுக்கான படகு சேவை இடம்பெற்றுள்ளது.

அத்துடன் குடிதண்ணீர், மலசலகூடம் உள்ளிட்ட வசதிகளும் பிரதேச சபைகளுடாக மேற்கொள்ளப்பட்டது.

வைத்திய சேவைகளை வழங்கும் முகமாக யாழ். மாவட்டத்திலிருந்து வைத்திய நிபுணர்களும் அங்கு சென்று மக்களுக்கான வைத்திய சேவைகளை வழங்கினர்.

அத்துடன் பொதுச்சுகாதார பரிசோதகர்களும் கலந்துகொண்டனர். இத்திருவிழாவில் மொத்தமாக 8 ஆயிரம் வரை மக்கள் கலந்துகொண்டதாகவும் இந்தியாவிலிருந்து கணிசமான அளவு மக்கள் கலந்துகொண்டதாக அங்கு சென்று வந்த மக்களால் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு இந்திய வியாபாரிகளின் வியாபார நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை எனவும் யாழ் மாவட்டதிலிருந்து சென்ற வியாபாரிகள் தமது வியாபார செயற்பாடுகளை மேற்கொண்டனர் என்றும் குறிப்பாக இந்தியாவின் மதுரை மாவட்டத்தில் உள்ள மீனவ மக்கள் இவ்விழாவில் அதிகளவில் கலந்துகொண்டனர். நடிகர்கள் மற்றும் அரசியல்வாதிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அங்கு விஜயம் செய்ததுடன் அவருடன் மதுரை மாவட்ட மீனவ சங்கங்களும் யாழ் மாவட்ட மீனவ சங்கங்களும் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டனர்.

இதில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் றெக்சியன், ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் க.கமலேந்திரன், ஈ.பி.டி.பி. சர்வதேச அமைப்பாளர் மித்திரன் உள்ளிட்ட ஈ.பி.டி.பி. கட்சி அமைப்பாளர்கள் மற்றும் வடமாகாண நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

திருவிழா நேற்று காலை 9.00 மணியளவில் கொடியிறக்கத்துடன் நிறைவுபெற்றது. (85)

## முரசுமோட்டை பொதுச்சந்தை மக்களின் பாவனைக்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை பொதுச்சந்தை இம்மாதம் நடுப்பகுதிக்குள் திறந்து வைக்கப்படவுள்ளதாக கரைச்சிப் பிரதேச சபைத் தலைவர் நா.குகராஜா தெரிவித்துள்ளார்.

இப்பொதுச் சந்தை இதுவரை திறக்கப்படாமையால் இங்குள்ள வியாபாரிகள் பெரும் கஷ்டத்தின் மத்தியில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் இப்பொதுச் சந்தை புனரமைக்கப்பட்டும் இதுவரை திறக்கப்படாததை அடுத்து இப்பகுதி கிராம அலுவலர் பிரதேச சபை தலைவரிடம் விடுத்த கோரிக்கையை அடுத்து பிரதேச சபைத் தலைவர் சில புனரமைப்புப் பணிகள் இடம்பெறும் நிலையில் அவை நிறைவுற்றதும் இம்மாத நடுப்பகுதியில் திறந்து வைக்கப்படும் என அவர் தெரிவித்தார். (கே)

## யாழ். கன்னாதிட்டி காளியம்மன் திருவிழா

யாழ். வண்ணை - கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் திருவிழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணிக்கு இரதோற்சவமும் மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது. (10)

## பொன்னாலையில் சமுத்திரத் தீர்த்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பொன்னாலை வரதராஜபெருமாள் கோவில் வருடாந்த இலட்சார்ச்சனைப் பெருவிழாவினை முன்னிட்டு, இரண்டு வருடங்களின் பின்னர் திருவடி நிலையில் நாளை மறுதினம் சமுத்திரத் தீர்த்தம் இடம்பெறவுள்ளது. யாழ் பொன்னாலை வரதராஜபெருமாள் கோவில் வருடாந்த இலட்சார்ச்சனைப் பெருவிழா கடந்த மாதம் 26 ஆம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும் இலட்சார்ச்சனை திருவிழாவை அடுத்து பதினோராம் நாளான எதிர்வரும் 07 ஆம் திகதி கா[illegible]லை சுழிபுரம் திருவடிநிலை க[illegible]ற்கரைக்கு [illegible] வரதராஜபெருமாள் தீர்த்த[illegible]ட வுள்ளார். கடந்த இரு வருடங்களாக வரதராஜப் பெருமாள் திருவடி நி[illegible]லத் தீர்த்தக்கரையில் தீர்த்தமாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை நடத்திய சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் 165 ஆவது ஆராதனை விழா நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய லக்சுமி நாராயண மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளரும், வட இலங்கை சங்கீத சபைத் தலைவருமாகிய வை.செலவராஜா தலைமையில் நடைபெற்ற ஆராதனை விழாவில், முதல் நிகழ்வாக, சற்குரு ஸ்ரீ தியாகராஜா சுவாமிகள் திருவுருவப் படம் மங்கள இசை வாத்தியத்துடன் ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய வீதி வழியாக வலம் வந்து மண்டபத்திற்கு எடுத்து வரப்பட்டது.

தொடர்ந்து, மங்கள விளக்கேற்றத்துடன், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள் அருளாசியுரையுடன், சகல இசைக் கலைஞர்களும் இணைந்து பஞ்சரதத்தின கீர்த்தனாஞ்சலி இசைத்தனர். இதனைத் தொடர்ந்து கலைக் கீரத்தி நந்தினி சிவராஜனின் மாணவிகளின் நாட்டியாஞ்சலியும், இராமநாதன் நுண்கலை மாணவிகளின் நடன நிகழ்வும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான இந்திய துணைத்தூதுவர் வெங்கடாசலம் மகாலிங்கம், ஸ்ரீமதி நித்தியா மகாலிங்கம் பிரதம விருந்தினர்களாகவும், தொழிலதிபர் இ.எஸ்.பி.நாகரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர். (எஸ்)

### கூட்டம் ஒத்திவைப்பு

உரும்பிராய் விவசாயிகளிற்கும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரினுக்கும் இடையில் இன்று மாலை 4.00 மணிக்கு உரும்பிராய் சரஸ்வதி சனசமூக நிலையத்தில் இடம்பெறவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணத்தினால் இடம்பெறமாட்டாது என்றும் சந்திப்பு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமென கோப்பாய் பிரதேச ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அமைப்பாளர் இ.ஜங்கரன் தெரிவித்துள்ளார். (135)


### சிறு விளம்பரம்

**டயாணா பிளாஸ்ரிக் தொழிலகம்**

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப் புளியடி, யாழ்ப்பாணம். Tel:- 021 222 8680, 0775925088 (C/1285)


## 'எத்தனங்கள்' சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா




(யாழ்ப்பாணம்)

சிற்பனை கீதா கணேஷ் எழுதிய "எத்தனங்கள்" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை காலை 10.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வை.கோவர்த்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக ஜப்பான் கக்சுயின் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளரும் யாழ் பல்கலைக்கழக தமிழ்த் துறையின் முன்னாள் விரிவுரையாளருமான முனைவர். மனோன்மணி சண்முகதாஸ் கலந்து சிறப்பிக்கின்றார்.

வெளியீட்டுரையினை எழுத்தாளர் தாட்சாயனியும் நயப்புரையினை எழுத்தாளர் யோகேஸ்வரி சிவப்பிரகாசமும் வழங்குகின்றனர். வாழ்த்துரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் வழங்குகிறார். யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறையின் இலக்கிய மன்றத்தின் வெளியீடாகவரும் இந்நூல் கீதா கணேஷின் முதற்தொகுதியாகும்.

றாதிகா, நிவேதிதா, கீதா கணேஷ் போன்ற பெயர்களில் எழுதிவரும் செல்வி. லோககீதா கணேசலிங்கம் யாழ்ப்பாணம் வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வவுனியாவில் தனது பாடசாலைக் கல்வியை நிறைவு செய்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழைச் சிறப்புப் பாடமாகப் பயின்ற கலைமாணிப் பட்டதாரி. சமூகத்தின் பல்வேறு மட்டங்களிலும் நிகழும் பிரச்சினைகளை இவர் தன் படைப்புகளில் வெளிப்படுத்தியுள்ளார். சஞ்சிகைகள் மற்றும் பத்திரிகைகளில் வெளியான பதினொரு சிறுகதைகள் இதில் தொகுக்கப்பட்டுள்ளன. வயதான பெற்றோரின் அநாதரவான நிலை, சிறுவர் தொழிலாளர், சீதனப் பிரச்சினை என்பவற்றோடு எமது சமூகத்தில் தற்போது பல்வேறு நெருக்கடிகளையும் எதிர்நோக்கும் முன்னாள் பெண் போராளிகளின் அவலநிலை என ஆசிரியரின் பன்முகப்பட்ட பார்வைகளின் வெளிப்பாடாக மகளிர் தினத்தையொட்டிய சிறப்பு வெளியீடாக வெளிவருகி[illegible]து.

## போருக்குப் பிந்திய மருதங்கேணி நூலுருவில் வெளிவருகிறது

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் செயற்பாடுகள் அடங்கிய சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படவுள்ளது. இப்பிரதேசம் கடந்த யுத்த அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் அதன் பின்னர் தற்போது இப்பிரதேசத்தின் செயற்பாடுகள் குறித்த விடயங்களை உள்ளடக்கிய இம்மலரை வெளியிட இப்பகுதி மக்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்விடயம் தொடர்பான கூட்டம் அண்மையில் நடைபெற்றதுடன் இதில் மருதங்கேணி உதவி அரச அதிபர் உட்பட அதிகாரிகள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆகியோர் கலந்துகொண்டு இம்மலர் வெளியீடு தொடர்பாக ஆராய்ந்தனர். (100)

## புதிய வங்கி திறப்புவிழா

அரச வீடமைப்பு வங்கி (HDFC) வங்கி தனது புதிய கிளையை நாளை காலை 11.00 மணிக்கு கே.கே.எஸ். வீதியில் திறந்துவைக்கவுள்ளது. இந்நிகழ்வில் வங்கியின் தலைவர் திருமதி சிறோமி விக்கிரமசிங்க, பொதுமுகாமையாளரும் நிறைவேற்று அதிகாரியுமான எஸ்.திஸநாயக்கஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு கிளையைத் திறந்துவைக்கவுள்ளனர். அரச வங்கியாகிய இவ் வங்கியில் சேமலாபநிதி மூலமான வீடமைப்புக் கடன், தங்கக்கடன், நிலையான, சேமிப்பு வைப்பு போன்ற வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் முகாமையாளராக சி.ஸ்ரீதரன் பணியாற்றவுள்ளார். (54)

## தமிழக பேராசிரியரின் சிறப்புச் சொற்பொழிவு

(தொண்டமானாறு)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி சூழலில் சந்தியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப் பேரவையினரால் வெள்ளிக்கிழமை தோறும் நடத்திவரும் சமயச் சொற்பொழிவுத் தொடரில் எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு சென்னை செல்லாமாரிஸ கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் விஜயலட்சுமி இராமசாமி அவர்களின் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (60)

### பெண்களை வலுவூட்ட நாடகம்

கா[illegible]கர் வியாவில் கிராம அபிவிருத்திச் சபை யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் பெண்களை சட்ட ரீதியாக வலுப்படுத்தல் என்னும் நாடகம் நாளை செவ்வாய்க்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வியாவில் சைவ வித்தியாலய மைதானத்தில் இடம்பெறும் இந்நாடகம் சட்டவல்லுநர் குழுவினால் நடத்தப்படவுள்ளதாகவும் அனைத்துப் பொதுமக்களையும் கலந்துகொள்[illegible]மாறு சபையினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (50)

தவறு செய்து விட்டோம் என்று தெரிந்தும், அதை ஒப்புக் கொள்ள வெட்கப்படாதே.
- ஔவையார்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## நமக்கு வேண்டிய ராஜதந்திரம்?

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவரவிருப்பதாகச் சொல்லப்படும் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது என்பது உறுதியாகிவிட்டது என எக்ஸ்பிரஸ் இணையத்தளம் வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஒரு நாட்டுக்கு எதிராக மனித உரிமைக் குழுவில் கொண்டுவரப்படும் தீர்மானங்களை ஆதரிக்க மாட்டோம் என்று இந்தியா தெரிவித்துவிட்டதன் மூலம் இலங்கையை குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக அச்செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்து வெளியிட்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், இலங்கையைப் பிணை எடுக்கும் இந்தியாவின் முடிவு இந்திய – ஈழத்தமிழர் உறவில் பாதகத்தை ஏற்படுத்தும் என்று இந்தியாவை எச்சரித்துள்ளார். கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளர் தெரிவிக்கும் கருத்து கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ கருத்துத்தானா என்பதை வழக்கம் போல உறுதிப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

ஏனெனில், "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த எவரும் ஜெனீவா சென்று இலங்கை அரசுக்கெதிராகச் செயற்படப் போவதில்லை. அது இங்குள்ள தமிழ் மக்களுக்கு மேலும் பாதகமாகவே அமையும்" என்று கூட்டமைப்பின் தலைவர் வெளியிட்ட அறிக்கையானது, அவரதும் கூட்டமைப்பின் மற்றொரு உறுப்பினரதும் கருத்தே தவிர கூட்டமைப்பின் கருத்தல்ல என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சில நாட்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது எல்லோருமறிந்ததே.

இப்போது, கூட்டமைப்பின் பேச்சாளர் இந்தியாவுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கை, கூட்டமைப்பின் தலைவரும் சேர்ந்து விடுத்திருப்பதுதானா என்ற சந்தேகம் உண்டாவது இயற்கையே. ஆனால், கடந்த வெள்ளியன்று பிபிசி தமிழோசைக்கு கூட்டமைப்பின் தலைவர் வழங்கிய செவ்வியில், ஜெனீவா செல்வதில்லை என்று முடிவெடுத்தமை பற்றிய கேள்விக்கு, "எங்களுக்குள் குழப்பமில்லை... எங்களுக்குள் குழப்பமில்லை..." என்று ஐந்து தடவைகள் உரத்துக் கூறி ஆவேசமுடன் மறுத்திருந்தார்.

அதை வைத்துப் பார்க்கும் போது, இலங்கையைப் பிணை எடுக்கும் முடிவின் மூலம் இந்தியாவுக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவு முறிவடையும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக கூட்டமைப்பின் பேச்சாளர் கொழும்புப் பத்திரிகைக்குத் தெரிவித்திருப்பது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமைப்பட்ட கருத்தாகவே கொள்ள வேண்டியிருக்கிறது.

அப்படியென்றால், இப்போது குழப்பம் உண்டாகியிருப்பது தமிழ் மக்களாகிய நமக்குத்தான். நம்முடைய உறவு முறிந்து விட்டால் இந்தியாவுக்கு எல்லையோரங்களில் அபாயங்கள் ஏதாவது காத்திருக்கிறதா? அல்லது இனித்தான் அங்குள்ள நமது சகோதரத் தமிழர்கள் இந்திய அரசையே ஆட்டங் காணச் செய்துவிடப் போகிறார்களா?

தவிரவும், இந்தியப் பிரதமரைக் கொலை செய்தது சிங்களவர்கள் என்றுதான் இந்தியா நம்முடன் இதுவரை உறவு கொண்டாடிக் கொண்டிருந்ததா? அந்தக் கொலையைக் கண்டித்துத் தமிழ் மக்களிடம் பேசித்தான் இவர்கள் பாராளுமன்றம் போனார்களா? அந்த உறவுதான் இப்போது முறியும் நிலைக்கு வந்துள்ளதா?

இலங்கை அரசுக்குச் சவால் விட்டு, இந்தியாவுக்குச் சவால் விட்டு அழித்துமுடித்த மக்கள் தொகை போதும்தானே! இனி, கொஞ்சம் வித்தியாசமாக, சீனாவுக்குச் சவால் விட்டு விட்டு கனடாவுக்கோ லண்டனுக்கோ பிள்ளைகுட்டிகளோடு போயிருந்து அழிவுகளை ரீவியில் பார்த்து, எல்லாம் முடிந்தபிறகு திரும்பி வந்து அடுத்த சவாலை ரஷ்யா, கியூபா என்று ஆரம்பிப்பதை யோசிக்கலாம்.

இப்படியே இவர்களாகவே ஏதோ உலகையே மிரட்டக்கூடிய சமூகம் நாங்கள் என்பது போல எச்சரிக்கை விடுவதும் உறவை முறிப்பதுமாக இருந்துதானே தமிழ் மக்களை இந்த நிலைக்குக் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். அவர்கள் கொன்று பகைத்தால், இவர்கள் வாயால் பகைத்தே நம்மை அழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி மற்றவர்களின் துரோகத்தனம் பற்றியே பேசுவதும், எச்சரிப்பதும் சவால் விடுவதுமாக உதார் விட்டுக்கொண்டிருப்பது, மக்களிடம் வீராவேசத்தைத் தூண்டிக் குளிர்காயும் அரசியலே தவிர, நமது மக்களைக் காப்பதற்கு வேண்டிய ராஜதந்திரமாகுமா?

.- ஆசிரியர்

# அமைச்சர்களடங்கிய உயர்மட்டக் குழு மீண்டும் ஜெனிவாவிற்குப் பயணம்

(கொழும்பு)

ஜெனிவாவில் தற்போது இடம்பெற்றுக் கொண்டிருக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையில் கலந்து கொள்வதற்காக இலங்கை அமைச்சரவையைச் சேர்ந்த உயர்மட்டத் தூதுக்குழு ஒன்று எதிர்வரும் 14 ஆம் திகதி அங்கு பயணமாக உள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காக சென்றிருந்த தூதுக் குழுவினர் நாடு திரும்பிய நிலையில், கடந்த இரண்டு வருடத்திற்குள் இலங்கை அடைந்துள்ள வளர்ச்சி தொடர்பில் ஜெனிவா கூட்டத் தொடரில் தெரிவிக்கப்பட்டது.

யுத்தம் நடைபெற்று வந்த நாட்டில் தற்போது அபிவிருத்திப் பணிகள் நடைபெறுவதனால் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகள் மகிழ்ச்சி அடைந்ததாக ஊடகவியலாளர்களிடம் இத் தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## பாவனையாளருக்கு அநீதி அதிகாரசபை மௌனம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து .இறக்குமதி செய்யப்படும் மீன் டின்களில் அடைக்கப்பட்டுள்ள மீன் வகைகளுக்கும் குறித்த மீன் டின்னின் வெளிப்புற லேபலில் குறிப்பிடப்பட்டிருக்கும் மீனின் வகைக்குமிடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுவதாகச் கூட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மீன்டின் லேபலில் மக்களால் விரும்பி உண்ணும் மீனின் பெயர் பொறிக்கப்பட்டிருந்தாலும் உள்ளே வேறு மீன்கள் அடைக்கப்பட்டிருப்பது தற்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த மீன் எடையிலும் குறைவு காணப்படுவதும் தெரிய வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபையின் கவனததுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பினும் இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படுமானால் மீன் டின் இறக்குமதியாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணத்தினால் இந்த விடயம் தொடர்பில் நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை மௌனம் சாதிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நெல் சந்தைப்படுத்தல் விவசாயிகள் சிரமம்

(கொழும்பு)

பெரும்போக அறுவடையில் கிடைத்த நெல்லை சந்தைப்படுத்த முடியாமல் விவசாயிகள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். நெல் கொள்வனவின் போது, பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதன் காரணமாக விவசாயிகள், பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வருவதாக பல்வேறு தரப்பினரும் குற்றம் சாட்டுகின்றனர்.

எனினும், தேவையான அளவு நெல்லை கொள்வனவு செய்ய தாம் தயாராக இருப்பதாக நெல் கொள்வனவு சபை தெரிவித்துள்ளது.

நெல்கொள்வனவில் காணப்படும் நிபந்தனைகள் குறித்து, கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பீ. ஹரிசன் இவ்வாறு தெரிவித்தார்.

## இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை மகளிர் தினத்தை கொண்டாட ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேசிய கூட்டுறவுச்சபை ஏற்பாட்டில் எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி 101 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை தேசிய கூட்டுறவுச் சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களின் தலைவிகள் உட்பட 10 அங்கத்தவர்களை கலந்து கெள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மற்றும் கலாசார செயற்பாடுகளையும் மகளிரின் திறமைகளை எடுத்துக்காட்டும் சமய வேலைத்திட்டங்கள் கருத்துப் பொதிந்த போதனைகள் மற்றும் சிறு வியாபாரங்களை ஆரம்பித்தல் தொடர்பாக அறிவூட்டும் வேலைத் திட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே விஷேட ஆற்றல்களைக் கொண்ட மகளிரை அடையாளம் காண்பதற்கும் செயற்றிட்டங்களை ஊக்குவிப்பதற்கும், மாவட்டத்தின் திறமைகளை மெருகூட்டுவதற்கும் மகளிர் குழு முன்வரவேண்டும்.

அதேவேளை, மாகாண மட்டத்தில் சமர்ப்பிக்கும் அழகியற்கலை ரீதியான நிகழ்வு களையும் சமர்ப்பிப்பதற்கு யாழ். மாவட்ட கூட்டுறவு சபையுடன் தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை செய்து கொள்ளுமாறும் இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை பொது செயலாளர் அறிவித்துள்ளார்.

(எஸ்)

## காமாட்சியம்பாள் ஆலயத்தில் மாசிமகத் திருநாள்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி வடக்கு குறுக்கு வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ காமாட்சியம்பாள் ஆலயத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை மாசி மகத்திருநாளன்று காலை 9.00 மணிமுதல் அன்னைக்கு விசேட திரவியாபிஷேகமும் சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. தொடர்ந்து தீபாராதனையும் அன்னதானமுமம இடம்பெறும்.

மாலையில் விஷேட அலங்கார பூஜை நடைபெற்று தீபபூஜையும் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்பும் மங்கையர்கள் முன் கூட்டியே ஆலயத்தில் தங்களைப் பதிவு செய்து கொண்டு பூஜையில் கலந்து கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாசி மகபூரணையில் தீப பூஜை செய்வது சிறப்பானது என்பதாலும், பல்வேறு சௌபாக்கியங்களையும் தரவல்லது என்பதாலும் விரும்பும் மகளிர் யாவரும் இதில் ஆர்வமுடன் கலந்து கொள்வது சிறப்பானதாகும்.

தொடர்ந்து தீப அலங்காரத்துடன் அன்னையின் திருவீதியுலாவும், பூரண சந்திர தரிசனமும் இடம்பெற்று விழா நிறைவு பெறவுள்ளது. (10)

## இளையான்குடிமாற நாயனார் புராணம்; கருத்தரங்கும் கருத்தாடலும்

(யாழ் நிருபர்)

பெரிய புராணத்தில் இளையான்குடிமாற நாயனார் புராணம் பற்றிய கருத்தரங்கும் கருத்தாடலும் நாளை மறுதினம் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு நாவலா கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் மா.வேதநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் வரவேற்புரையை சரவணை நாகேஸ்வரி வித்தியாலய ஆசிரியர் கு.பாலசண்முகன், தொடக்கவுரையை கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் ஆகியோர். வழங்குவர்.

இளையான்குடிமாற நாயனார் புராணத்தின் கட்டமைப்பு என்ற பொருளில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், இளையான்குடிமாற நாயனார் காட்டும் வாழ்வியல் என்ற தலைப்பில் பண்டிதர் சைவப் புலவர் வ.ஆ. தங்கமயில் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

கருத்தரங்கைத் தொடர்ந்து கருத்தாடல் இடம்பெறும். இதன் இணைப்பாளர்களாக சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல், பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆசிரியர் ந.சத்தியவேந்தன் ஆகியோர் பங்கேற்பர்.

இளைய தலைமுறையினரிடையே சமய நம்பிக்கைகளைக் கட்டி வளர்க்கும் நோக்குடனும் ஆய்வுப் பார்வையில் சமய இலக்கியங்களை அணுகும் முறைமையைப் பயிற்றுவிக்கும் எண்ணத்துடனும் இக்கருத்தரங்கு நடத்தப்படுகிறது எனவும் ஆர்வமுள்ள எவரும் இக் கருத்தரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம் எனவும் இதன் நெறியாளர் கலாநிதி மனோன் மணி சண்முகதாஸ் தெரிவித்தார்.

மண்டபத்திற்கான அனுசரணையை யாழ்.மாநகரசபையின் கலாசாரப் பகுதியினரும் நிகழ்வுக்கான அனுசரணையை கொக்குவில் உயர்கலைக் கல்லூரியினரும் வழங்கியுள்ளனர்.

(10)

## இடமாற்றம்

(வடமராட்சி)

கிளிநொச்சி மாவட்ட மீன்பிடித் திணைக்கள நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் ந.கணேசமூர்த்தி இன்று திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வருடங்கள் பணிபுரிந்து யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு சிறந்த சேவைகள் பல ஆற்றியுள்ளார்.

இவரது இடத்திற்கு யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் இ.ரவீந்திரன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (100)

## ஓய்வூதியம்

(வடமராட்சி)

யாழ். மாவட்ட ஓய்வூதியர்களுக்கான மார்ச் மாத ஓய்வூதியம் எதிர்வரும் 8 ஆம் திகதி அவர்களுக்குரிய வங்கிகள் ஊடாக வழங்கப்படவுள்ளது.

அவர்களுக்கான ஓய்வூதியப் பற்றுச்சீட்டுக்கள் பிரதேச செயலகங்கள் ஊடாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (100)

## இலவச ஆங்கில வகுப்பு


(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச சபையின் சரசாலை பொது நூலகத்தால் இலவச ஆங்கில வகுப்புக்கள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதன்படி பிற்பகல் 3 மணிக்கு முதன்மைநிலை மாண வர்களுக்கும் பிற்பகல் 4.30 மணிக்கு மேல் வகுப்பு மாண வரகளுக்கும் வகுப்புக்கள் ஆரமபித்து வைக்கப்படவுள்ளன.

இவ் ஆங்கில வகுப்பில் கலந்துகொள்ள விரும்புபவர்கள் குறித்த நேரத்திற்கு சமுக மளிக்குமாறு நூலகர் இ.தர்மராஜா அறிவித்துள்ளார். (11)

# வைத்தியசாலையின் காணிப்பிணக்குகள்; அதிகாரிகளுடன் கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையின் புதிய அலகொன்றை நிர்மாணிக்க உத்தேசித்திருக்கும் காணியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி கடந்த வியாழக்கிழமை சென்று பார்வையிட்டார்.

இவ்வலகானது COLOURS OF COURAGE TRUST (GUARANTEE) LTD இனால் சேகரிக்கப்பட்ட ரூபா 100 மில்லியன் நிதியின் மூலம் Mass Holding நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்படவுள்ளது.

ஆளுநர் இவ்விஜயத்தின் போது இக் காணி தொடர்பாக நிலவி வரும் பிணக்குகள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடியதுடன், ஒரு வாரகாலத்திற்குள் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகவும் தெரிவித்தார்.

மேலும் இக்காணியினூடாக உயர் அழுத்த மின்கம்பிகள் செல்வதால் அவற்றை அகற்றுவது தொடர்பாக இலங்கை மின்சார சபை அதிகாரிகளுடன் கலந்துரையாடி ஒரு மாத காலப் பகுதிக்குள் அவற்றை இடம் மாற்றுமாறும் பணித்தார்.

இவ்விஜயத்தின் போது ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வலி.வடக்கு பிரதேச செயலகத்தின் திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் மற்றும் இலங்கை மின்சார சபையின் யாழ் பிராந்தியத் தலைவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மஹோற்சவம்

(திருநெல்வேலி)

காரைநகர் - மணற்காடு அருள்மிகு கும்பநாயகி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவப் பெருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

19 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும், 21 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், 22 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (60)

## கயஸ் வாகன விபத்தில் ஆட்டோ சாரதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஆட்டோவிலிருந்து இறங்கி நின்ற ஆட்டோ சாரதியை பின்னால் வந்த கயஸ் வான் மோதியதில் சாரதியின் முதுகெலும்பு உடைந்ததுடன் ஆட்டோவும் பலத்த சேதம் அடைந்துள்ளது.

நெல்லியடிப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 9 மணிக்கு இவ் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அதே இடத்தைச் சேர்ந்த ராமசாமி பத்மராசா (வயது-39) என்ற குடும்பஸ்தரே முதுகெலும்பு முறிந்த நிலையில் பருத்தித்துறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேதிலக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கயஸ் வான் சாரதியை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (எஸ்,18)

## புதிய நிர்வாக சபை தெரிவு

பருத்தித்துறை 4 ஆம் குறுக்குத்தெரு சித்திராயா கலையகத்தில் கலைஞர் வட்டச் செயற்பாட்டு விரிவாக்கக் கூட்டம் அண்மையில் பருத்தித்துறையில் பொ.மகாதேவா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபை உதவியோகத்தர்களாக பொ.மகாதேவா (தலைவர்), யோ.இருதயராசா (செயலாளர்) சிவா. கிருஷ்ணமூர்த்தி (பொருளாளர்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் 6 பேர் கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (116)

# தேவன்கட்டு குளப்பகுதியில் கண்ணிவெடி அகற்ற ஏற்பாடு

(முழங்காவில்)

இதுவரை காலமும் கண்ணிவெடி அகற்றப்பட்டாது இருந்த முழங்காவில் ஜெயபுரம் தேவன கட்டு குளத்தை அண்டிய 548 ஏக்கர் நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்றுவதற்கு அடுத்த வாரம் முதல் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என முழங்காவில் வலய கண்ணிவெடி அகற்றும் பணிகளுக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரி பொன்சேகா தெரிவித்துள்ளார்.

மேற்படி தேவன்கட்டு குளத்தை அண்டிய பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட இராணுவ அதிகாரி மற்றும் ஜெயபுரம் வடக்கு கிராம சேவையாளர் பொ.பாலச்சந்திரன், ஜெயபுரம் கமக்காரர் அமைப்பைச் சேர்ந்த யோக்கின் தர்மராஜா ஆகியோர் நிலைமைகளை ஆராய்ந்தனர்.

அதன் பின்னரே இராணுவ அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் கண்ணிவெடிகள் அகற்றுவதற்குரிய பூர்வாங்க நடவடிக்கைகளை ஈபிடிபியாழ.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விழுமியக் கருத்தரங்கு

(யாழ்.நிருபர்)

இலங்கை சின்மியா மிஷனும் வட மாகாண கல்வித் திணைக்களமும் இணைந்து சின்மியா கிராமிய அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் 'சின்மியா தூரநோக்குத் திட்ட விழுமியக் கருத்தரங்கு' இன்று திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறும் இச் கருத்தரங்கில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் துணுக்காய் கல்வி வலயப் பாடசாலைகளில் சைவநெறிப் பாடத்தைக் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென வட மாகாணக் கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்நிகழ்வில் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நாகபட்டினம் சின்மியா மிஷன் சுவாமிகள் இராமகிருஷ்ணானந்தா, இலங்கை சின்மியா மிஷன் சுவாமிகள் பிரமச்சாரி ஜாக்கிரத்சைதன்யா ஆகியோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்குவர். (10)

# தென்மராட்சி இலக்கிய அணியின் மும்முனைப் பட்டிமன்றம்


(சாவகச்சேரி)

சாவகச்சேரியிலுள்ள தென்மராட்சி இலக்கிய அணி வழங்கும் மும்முனைப் பட்டிமன்றம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ.கலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறும். இப் பட்டிமன்றம் க.பொ.த உயர்தர கலைப்பீட மாணவர் களுக்கு தமிழ்ப் பாடவிதானம் தழுவியதாக இடம்பெறவுள்ளது.

இதன்படி க.பொ.த உயர்தர தமிழ் பாடத்தில் உள்ள கைகேயி சூழ்வினைப் படலம் என்னும் பாடத்தைக் கற்போர் மனதில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துவது கைகேயியின் வஞ்சனையோ, தசரதனின் துயரமோ, இராமனின் பெருமையோ என்ற தலைப்புக்களில் விவாதம் நடைபெறவுள்ளது.

இவ் விவாத அரங்கில் பேராசிரியர் ரி.வேல்நம்பி நடுவராக கலந்துகொள்ளவுள்ளதுடன் இதில் க.பொ.த.உயர்தரத்தில் தமிழ்ப் பாடம் கற்கும் மாணவர்கள் மற்றும் ஆர்வலர்களைக் கலந்துகொண்டு பயன் பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (11)







சாவகச்சேரி லயன் கழகத்தினரும் லங்கெம் நிறுவனமும் இணைந்து தென்மராட்சி பிரிவிலுள்ள 800 முன்பள்ளி மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு அண்மையில் தென்மராட்சி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற போது லங்கெம் நிறுவனப் பணிப்பாளர் மங்கள விளக்கேற்றுவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், லயன் கழகத்தினரும் லங்கெம் நிறுவனத்தினரும் இணைந்து மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதையும் காணலாம். (11)


# வடக்கின் புகையிரதப் பாதை புனரமைப்பு துரித கதியில்



(கிளிநொச்சி)

வடக்கிற்கான புகையிரதப் பாதைப் புனரமைப்புப் பணிகள் மிகவும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. அந்த வகையில் ஓமந்தையிலிருந்து கிளிநொச்சி வரை ஒரு பகுதியாகவும் கிளிநொச்சி பளையிலிருந்து காங்கேசன்துறை வரைக்கும் இன்னொரு பகுதியாகவும் பணிகள் மேற் கொள்ளப்பட்டுவரும் நிலையில் அதற்கான தண்டவாளங்கள் கனரக வாகனங்கள் மூலம் கிளிநொச்சியிலும் பளையிலும் கொண்டுவரப்பட்டுள்ளது. தற்போது புகையிரதச் சேவை வவுனியா ஓமந்தை வரைக்கும் நடைபெற்றுவரும் நிலையில் 2013ஆம் ஆண்டின் இறுதிக்குள் யாழ்தேவி கிளிநொச் சிவரை இடம்பெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (29)

# பரமர் சங்கமம்



உலகெங்கும் தீவிர வாதம் கொடி கட்டிப் பறந்துள் ளது. அது எதுக்காக இன விடு தலைக்காக என்பதில் புதுமை யெதுவும் கிடையாது.

வரலாற்றை எடுத்துப்பார்த்தால் மக்களின், நாடுகளின் பூகோள அமைப்புக்களால் அங்கீகாரம் பெற்ற அரசுகளே காலத்துக்குக்காலம் தோற்கடிக்கப்பட்டு வீழ்ச்சி கண்டு போயின எண்டறிகிறோம்.

அப்புடி இருக்கையில் மக்களின், நாடுகளின் பூகோள அமைப்புக் களின் சட்டதிட்டங்களைத் தூக்கி வீசி விட்டு, தார்மீக அமைவான ஆட்சி பீடங்களை வீழ்த்த வெளிக்கிட்ட பல தீவிரவாதக் குழுக்கள் முடிவில் இருந்த இடமே இல்லாமல் அழிக்கப்பட்டுள்ளதையே காண முடிகிறது.

அந்த வரிசையில் இன விடுதலைக்காகத் தீவிர கொள்கை களோடும், நடவடிக்கைகளோடும் வெளிக்கிட்ட நெல்சன் மண்டேலா தொடக்கம் டக்ளஸ் தேவானந்தா வரையான எத்தனையோ தீவிரப் போக்குடைய தலைவர்கள் பிற்பாடு அரசியல் நீரோட்டத்தோடை இணைஞ்சுள்ளதையும் பார்க்கிறோம்.

எந்தவகையான போராட்ட வழிமுறைகளிலோ நிர்வாகக் கட்ட மைப்பிலோ, பொருளாதார சீர்மைப்பிலோ, மக்களை வழிநடத்திச் செல்வதிலோ மிகவும் நேர்த்தியாக செயற்பட்டு வந்தபோதும், உலக நடைமுறை அலகான எந்தவொரு அங்கீகாரத்தையும் பெற்றுக் கொள்ளதாக அமைப்பு பயங்கரவாத அமைப்பாகவே கொள்ளப்படு வது எவ்வளவு உண்மையாகி விட்டது.

எவ்வளவோ வெற்றிகரமான செயற்பாடுகளைக் கொண்ட மைந்த போதும், புலிகளை உலக நாடுகள் பயங்கரவாதிகளாகவே கண்டனர். அதற்கு எடுத்துக் காட்டாக உலக நாடுகளில் தோன்றிய எந்தத் தீவிரவாதக் குழுக்களையும் ஒப்பிட்டு விட முடியாதல்லவா?

ஒடுக்கப்பட்டுள்ள இக்காலத்திலும் ஊர்களில் நடைபெற்றுக்கொண் டிருக்கும் அடாவடித்தனங்களைப் பார்த்து இதுக்கு அவங்கள்தான் சரி. அவங்கள் இருக்க வேணும் இருந்தால் இப்புடியெல்லாம் நடக்குமா? இன்றைக்கும் பேசப்படுகிறார்கள்.

அந்தளவுக்கு அவர்களின் ஒவ்வொரு நடவடிக்கைகளும் கண்ணுக்கை எண்ணை விட்டுக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட தென்றால் மிகையான புகழ்ச்சியல்ல.

எனக்கு உறவுக்காறப் பையன் ஒருவன் எனக்கெதிராக அவர்களி டம் முறைப்பாடொன்றைச் செய்திருந்தான். அக்காலத்தில் அரச அலகுகளான விதானைமார், பொலிஸ், கோர்ட் என்பன ஒன்றும் இயங்கவில்லை.

என்னைத் தேடிவந்த அமைப்பைச் சேர்ந்த அவனும் ஒரு சிறுவன் தான். என்னை அடுத்த நாள் விசாரணைக்கு வரும்படி உத்தரவிட் டான்.

"என்ன விசயம் பொறுப்பாளர் இல்லையா எண்டு விசாரிச்சுப் போட்டு நீங்களும் பொலிசுக்காரரை விட மோசமா இருக்கிறியள் கண்டதுக்கெல்லாம் விசாரணை அது இது" எண்டன்.

அவனுக்கு கேட்டமாதிரியைப் பார்த்து வெட்கம் வந்திட்டுது. ஒருமாதிரிக் குழைஞ்சான். சமயத்தைப் பயன்படுத்தி "கழுத்தை வெட்டுவன் எண்டுதானை சொன்னவன் அவனேம், கத்தியேம் ஒப் படைச்சுப் போட்டுப் போங்க நாளைக்கு அவனை முழுசாக் கொண்டு வாறன்" எண்டன்.

மறுநாள் அவர்களின் பேசுக்குப்போய் விடயம் சீராக்கி வந்த தெல்லாம் பழைய விடயங்கள். எண்டாலும் அவங்கட அணுகு முறைகள் இண்டைக்கும் நினைச்சுப் பாக்க வைக்குதெல்லே பாருங்க...

# நெடுந்தீவின் கல்வித்துறையை மேம்படுத்த அமைச்சர் அக்கறையுடன் செயற்படுகிறார்


## நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர்

(தீவகம்)

நெடுந்தீவின் அபிவிருத் தியில் மட்டுமல்ல கல்வி மேம் பாட்டிற்காகவும் எமது தலை வரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மற்றும் எமது கட்சியான ஈழ மக்கள் ஜனநாய கக் கட்சியும் அதிக அக்கறை யுடன் செயற்படு கின்றார்கள் என நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி.யின் நெடுந்தீவு பிரதேச இணைப்பா ளருமான தானியல் றெக்சியன் (ரஜீவ்) தெரிவித்தார்.

நெடுந்தீவு சிறிஸ்கந்தா வித்தியாலய இல்ல மெய்வல் லுநர் திறனாய்வுப் போட்டி நிகழ்வுகள் வித்தியாலய அதிபர் திருமதி க.தெட்சணாமூர்த்தி தலைமையில் கடந்த 28ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ் வுக்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரி விக்கையில்; மாணவர்கள் விளையாட்டுப் போட்டியோடு நின்று விடாது கல்வியிலும் சிறந்து விளங்க வேண்டும். பிள்ளை களின் வளர்ச்சியில் பெற்றோர்கள ஆகிய நீங்கள் கூடிய கவனம் எடுத்து செயற்படவேண்டும். எமது மக்களின் ஒத்துழைப்புடன் நெடுந்தீவு பிரதேசத்தை கட்டி யெழுப்ப நாம் முனைப்புடன் செயற்படும் அதேவேளை, அமைச்சர் நெடுந்தீவை துரிதமாக அபிவிருத்தி செய்யவேண்டும் என்பதற்காக அயராது உழைத்து வருகின்றார். சென்ற ஆண்டு பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத திட்டத்தில் இந்த மைதானத்தை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து இந்த மைதானத்திலே பல



வருடங்களுக்கு பிறகு விளை யாட்டு விழாவை நடத்துவதற்கு ஏற்பாடு செய்து தந்துள்ளோம். தொடர்ந்து கல்வி தொடர்பான இடர்பாடுகளை நீக்குவோம் எனவும் பிரதேச சபைத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கோட்டக்கல்வி அதிகாரி க.அரசரத்தினம், மாகாண விளையாட்டுத்துறை உதவிக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர் பிரதேச சபை உறுப்பினர்கள், நெடுந்தீவு வைத் திய அதிகாரி, கடற்படை மக் கள் தொடர்பு அலுவலர், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# திருமஞ்சப் பெருவிழா

(திருநெல்வேலி)

சங்கானை அருள்மிகு நிகரை ஸ்ரீ ஞானவைரவப் பெருமான் ஆலய மாசி மகத்தினையொட்டி அலங்கார திருமஞ்சப் பெரு விழா நாளை மறுதினம் புதன் கிழமை மாலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் "திருமஞ்சத் தின் மகத்துவம்" எனும் தலைப் பில் மதுரகவி காரை.எம்.பி அரு ளானந்தன் சிறப்புச் சொற்பொழி வாற்றவுள்ளார். (60)

# அடிப்படை வசதிகள் அற்ற நாகர்கோவில் முன்பள்ளி

மீள்குடியேற்றம் இடம்பெற்ற நாகர்கோவில் பகுதியில் இயங்கும் முன்பள்ளி அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் பெரும் சிரமங்களை எதிர்கொள் வதாகத் தெரியவருகின்றது. தனியார் வீடொன்றில் 30 பிள் ளைகள் மற்றும் இரண்டு ஆசிரியர்களுடன் இயங்கும் இம் முன்பள்ளிக்கு தேவையான தள பாடங்கள் உட்பட எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை. மேலும் ஆசிரியர்களுக்கான அடிப்படைச் சம்பளமும் இல் லாத நிலையிலேயே அதன் ஆசிரியர்களும் பணியாற் றுகின்றனர்.

இடம்பெயர்வதற்கு முன்னர் 4 முன்பள்ளிகள் இயங்கிய இப் பிரதேசத்தில் ஒரேயொரு முன்பள்ளி மட்டுமே தற்போது இயங்குகிறது என்பது குறி ப்பிடத்தக்கது. (116)

# ஆன்மீகச் சொற்பொழிவு

(வலிகாமம்)

அனலைதீவு எழுவயல் அருள்மிகு ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.00மணிக்கு தமிழக சொற்பொழிவாளர் விஜயலட்சுமி இராமசாமியின் "பெரியபுராணம் காட்டும் வாழ்கை நெறி" என்னும் தலைப்பில் ஆன்மீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளது.

ஸ்ரீ மனோன்மணி அறநெறிப் பாடசாலைச் செயலாளர் ப.நடராசாவின் தலைமையில் நடைபெறும் மேற்படி நிகழ்வில், வரவேற்புரையினை சைவத்தமிழ் பண்பாட்டுக் கழக பணிப்பாளர் மதுரகவி காரை.எம்.பி.அருளானந்தன் அறிமுகவுரையினை வேலணை கல்விக் கோட்டப் பணிப்பாளர் கு.சரவணபவானந்தன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (60)

# முரசின் இன்றைய பலன்

(05.03.2012 –திங்கட்கிழமை)

கர வருஷம் மாசி மாதம் 22 ஆம் திகதி. துவாதசி முன்னிரவு 7.36 வரை.
நட்சத்திரம் பூசம். முன்னிரவு 9.53 வரை. சித்தயோகம்
இராகுகாலம் 7.55 - 9.25 வரை. சுபநேரம் 12.25 - 1.55 வரை.
எமகண்டம் 10.55 - 12.25 வரை. குளிகைகாலம் 1.55 - 3.25 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | தயக்கம், பிரச்சினைகள் குறையும், ஆடம்பரச்செலவு, தடைதாமதம் விலகும். |
| ரிஷபம் | மனத்தெளிவு, சகோதரநன்மை, இருப்பிட சுகம்,உறவினர் ஆதரவு. |
| மிதுனம் | புத்தி மேன்மை, ஆடைஆபரண சேர்க்கை, திடீர் பணவரவு, உற்சாக மிகுதி. |
| கடகம் | அதிகாரம், குடும்பத்தில் நன்மதிப்பு, சஞ் சலங்கள் தீரும், நிதானம் அவசியம். |
| சிம்மம் | தொல்லைகள், சுபகாரியங்கள், பாராட்டும் பதவி உயர்வும், ஜாமீன் வேண்டாம். |
| கன்னி | வாக்குபலதம், திருப்தியின்மை, பொன் பொருள் சேரும், சுபகாரியத்தடை. |
| துலாம் | எழுத்துமூலநன்மை,பணியில் திருப்தி யீனம், தொழிலில் போட்டி, பணவரவில் தடை. |
| விருச்சிகம் | சுப காரிய ஈடுபாடு, தந்தைவழி இலாபம், வெளிநாட்டுப்பயணம், பொரியோர் நட்பு.. |
| தனுசு | பயனற்றமுயற்சி, சாதக இடமாற்றம், தொழில் முதலீடுகள், சமாதானம் நன்று. |
| மகரம் | சகோதர உதவி, மனக்குழப்பம், திருமணப் பேச்சு, பணியில் ஜாக்கிரதை. |
| கும்பம் | அதிருப்தி, வெளியூர் பயணம், சுபச்செலவு கள், முன் எச்சரிக்கை. |
| மீனம் | தொழிலில் வளம், கடன்பட்ல், சுய செலவுகள், வீண் வாக்குவாதம். |



# பொருளாதார கவலைகள்; திசைதிருப்ப முடியாதவை!

இலங்கையின் பொருளாதாரத்தை நிலைகுலைய வைக்க மேற்குலகிற்கு இரு வழிகள் காணப்படுகின்றன. ஈரானிடமிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிக்கு தடை விதித்தல், வர்த்தகத் தடைகளை அமுல்படுத்துதல் ஆகிய இரு வழிகள மேற்குல கிற்குக் காணப்படுகின்றன. ஐரோப் பிய ஒன்றியமும் அமெரிக்காவும் எமது ஏற்றுமதிச் சந்தையில் 50 வீதத்தைக் கொண்டுள்ளன.

எண்ணெய்த் தடையானது மிகவும் அச்சமூட்டும் விடயமாகக் காணப்படுகிறது. ஏனெனில், இலங்கைக்குத் தேவையான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் என்பன ஈரானின் மசகெண்ணெயிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர மார்க்கங்களில் இந்த எண்ணெய் விநியோகத்தைப் பெற்றுக்கொள்ளுதல் இலங்கைக்கு மிகவும் கடினமானதாகும். ஈரானிடமிருந்து கடனடிப்படையிலேயே இலங்கை மசகைக் கொள்வனவு செய்கிறது.

எரிபொருள் விநியோகம் தடைப்படும் போது போக்குவரத்து, கைத்தொழில் துறை மற்றும் தேயிலைத் தொழிற்சாலைகள் என்பனவற்றில் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தும். பொதுமக்களின் ஆதரவு அலையைக் கிளறி விடும் தந்திரோபாயத்தில் ஆதாயம் பெற்றுக்கொள்ள இலங்கையின் தலைவர்கள் முன்வந்திருப்பது அபாயகரமான தெரிவாகும். இலங்கை நிர்வாகத்தை சீனா ஆரத்தழுவுவதால் இராணுவ ரீதியான நடவடிக்கைகளை வோஷிங்டனும் டில்லியும் நாடுவதற்கான சாத்தியப்பாடு இல்லை.

இதேவேளை, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களமானது சர்வதேச ரீதியில் இலங்கை விடயத்தை தனது கட்டுப்பாட்டில் எடுத்துக் கொண்டு புதுடில்லியை ஓரங்கட்டி



வைத்திருப்பது சுவாரஷ்யமான காட்சி யாகக் காணப்படுகிறது. முன்னுரிமை என்பது இப்போது பின்னடைவு கண்டுள்ளது. புதுடில்லி இப்போது இரண்டாவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

இலங்கை விவகாரத்தில் அண்மைய வருடங்களில் புதுடில்லி கையாண்ட தவறுகளின் அடிப்படையில் வேறு தெரிவை அமெரிக்கா கொண்டிருக்கவில்லை. அண்மையில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் பல்வேறுபட்ட வாக்குறுதிகளை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளார். அவரின் விஜயத்தின் பின் நான்கு நாட்களின் பின்னர் அந்த உறுதிமொழிகள் செயற்பாடற்றவையாக கீழ் நோக்கி சென்றுவிட்டன. அதன் பின்னர் டில்லி மயான அமைதியைக் காத்துவருகிறது.


ஜெனிவாவில் என்ன செய்வது என்பது தொடர்பாக இந்திய கொள்கை வகுப்பாளர்கள் குழம்பியிருப்பதாக தென்படுகிறது. வொஷிங்டனுக்கு ஆதரவளிக்கும் கடுமையான நிலைப்பாட்டை மீள உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டிய நிலையில் டில்லி உள்ளது.

பெப்ரவரியில் இடம்பெற்ற விலை உயர்வுகளை இலங்கை அரசாங்கம் கையாண்ட முறைமையானது தவறானதாகக் காணப்படுகிறது. பல வருடங்களாக நடைமுறையில் இருந்த எரிபொருள் மானியத்தை அரசாங்கம் நீக்கியிருந்தது. மின்சாரக் கட்டணங்கள் 25 - 40% வரை அதிகரிக்கப்பட்டுள்ளன.

நாணய மதிப்பிறக்கம், எரிபொருள அதிகரிப்பு, வட்டி வீதம் அதிகரித்தல், கடன் முடக்கம் போன்றவை யாவும் ஒன்று சேர்ந்து அதிகளவு பண வீக்கத்தையே ஏற்படுத்தும் நிலை தோன்றியுள்ளது. அதேவேளை நிகர தேசிய உற்பத்தி வளர்ச்சி வீதமும் வீழ்ச்சி கண்டுவருகிறது.

பெப்ரவரி 27 தொடக்கம் ஜெனிவா அமர்வுகள் காலத்தில் 150 ஆர்ப்பாட்டங்களை நடத்துவது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்த ஆரம்பம் கவரக்கூடிய விதத்தில் காணப்படவில்லை. பொருளாதார கவலைகளைத் திசை திருப்பும் நடவடிக்கைகள் பயனளிக்க வில்லையென்று தோன்றுகிறது. விடயங்கள் எவ்வாறு மாற்றமடையும் என்பதை எதிர்வரும் வாரங்கள் வெளிப்படுத்தும்.

- பேராசிரியர் குமார் டேவிட்



# வெற்றி யாருக்கு?

ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத் தொடர் குறித்து எதிர்பார்ப்புகள் மிதமிஞ்சிப் போயுள்ளன.

தமிழ் மக்களாக இருக்கட்டும், இலங்கை அரச தரப்பாக இருக்கட்டும் அல்லது தென்னிலங்கை மக்களாக இருக்கட்டும் அனைத்து தரப்பினரும் எதிரும் புதிருமான எதிர்பார்ப்புகளில் மிதந்து கொண்டிருக்கின்றனர்.

உண்மையில் வெற்றி யாருக்கு?

தமிழ் மக்களைப் பொறுத்து இது கசப்பானதாக இருக்கலாம். ஆனால் இதுவே உண்மை. வெற்றி தமிழ் மக்களுக்கோ சர்வதேச சமூகத்துக்கோ அல்ல! இலங்கையே இராஜதந்திரப் போரில் வெற்றிவாகை சூடிக்கொண்டுள்ளது….

உண்மையில் இந்தக் கூட்டத்தொடரில் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை குறித்தே விவாதிக்கப்பட்டிருக்க வேண்டும். அல்லது ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையுடன் கற்றுக்கொண்ட பாடங்களுக்கான நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையும் சமாந்தரமாக வைத்து ஆராயப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால் இலங்கை அரசாங்கம் மிக வெற்றிகரமாக இதனைத் திசை திருப்பி விட்டுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை கிடப்பில் போட வைத்துள்ளதுடன், தனது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை குறித்து அனைவரையும் பேச வைத்துள்ளது இலங்கை அரசாங்கம்.

மொத்தத்தில் உலக அரங்கில் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அங்கீகரிக்க வைத்து, ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை ஓரங்கட்டச் செய்வதில் இலங்கைக்கு இராஜதந்திர ரீதியில் வெற்றியே என்பதில் இரு கருத்துக்களுக்கு இடமில்லை.

ஐ.நா. மனித உரிமை கூட்டத் தொடரில் கூட, ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை விடுத்து நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்துவது குறித்தே பேசப்படுகின்றது.

அதனை இலங்கை அரசாங்கம் உறுதிப்படுத்தக் கோரும் தீர்மானத்தை முன்மொழிவதைப் பற்றியுமே பேசப்படுகின்றது….

தமிழ் மக்களும், புலம்பெயர்ந்த தமிழர்களும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இந்தப் பயணத்தில் சிந்தித்துச் செயலாற்றவில்லை என்பதை நாம் ஒத்துக்கொண்டாக வேண்டும். இந்தப் பயணத்தில் சர்வதேச சமூகத்தை செல்வாக்குச் செலுத்தும் வகையில் இராஜதந்திர நகர்வுகளை மேற்கொள்ள தமிழ் மக்களின் அனைத்து தரப்பும் தவறிவிட்டது என்ற உண்மையை ஏற்றுக் கொண்டாக வேண்டும்.

தமிழர் சமூகம் தொடர்ந்து சந்தர்ப்பங்களை நழுவ விட்டுக் கொண்டிருக்கிறது. இந்நிலை தொடருமாக இருப்பின், ஒட்டுமொத்த தமிழினத்தின் சாம்பலில் கூட அரசியல் அபிலாஷைகளைக் காண முடியாது போய்விடும்.

- வி. தேவராஜ் கட்டுரையிலிருந்து

# முன்னெச்சரிக்கையும் உயிரினங்களும்!



மனிதர்களைவிட பிராணிகள் பூகம்பம் வருவதை முன்கூட்டியே உணரத்தக்கவை என்ற உண்மையை பல ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நமது நாட்டில் சுனாமி வந்தபோதும் இதுபற்றி நிறைய செய்திகளைக் கேள்விப்பட்டோம். அதுபோல் நிலநடுக்கம், பூகம்பம் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் குறித்துவைக்கப்பட்ட பல ஆதாரங்கள் உண்டு.

⇨ ஜப்பானில் நாகோயா நகரில் ஏராளமான எலிகள் இருந்தன. ஆனால் திடீரென்று ஒருநாள் காணாமல் போய்விட்டன. மறுநாள் அந்த நகரில் பூகம்பம் ஏற்பட்டது. இது 1891ஆம் ஆண்டு நடைபெற்ற சம்பவம்.

⇨ சீனாவில் டியன்டிஸ் நகரில் 1969ஆம் ஆண்டு ஜுலை மாதம் 18ஆம் திகதி ஏற்பட்ட பூகம்பத்துக்கு இரண்டு, மூன்று, மணி நேரத்துக்கு முன்னதாக கோழிகள் தம் கூண்டுக்குள் புக மறுத்தன. புலிகள் வாலை கால்களுக்குள் நுழைத்துக் கொண்டன. குதிரைகளும், ஆடுகளும் அங்குமிங்கும் தறிகெட்டு ஓடின.

⇨ யூகோஸ்லாவியாவில் 1955ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்திற்கு முன் மிருகக்காட்சிச் சாலையில் இருந்த எல்லாப் பறவைகளும் கூச்சலிட்டன.

⇨ வட இந்தியாவில் 1976ஆம் ஆண்டு ஏற்பட்ட பூகம்பத்திற்கு 2 மணி நேரத்துக்கு முன்னால் மான்கள் எல்லாம் ஒன்றாகக் கூடி நடுங்கியபடி காட்சியளித்தன.

# காதலில் சொதப்புவது எப்படி

தலைப்பே கதையைச் சொல்லிவிடுகிற படம். குறும்படமாக வந்து, பிரபலமான அதைப் பார்த்து, நடிகரான சித்தார்த்தை தயாரிப்பாளராகவும் மாற்றிவிட்ட படம். முதல் படம் வாங்குவதற்குள், பல சொதப்பல்களை சந்திக்க நேரும் புதிய இயக்குனர்களுக்கு இப்படியும் ஒரு ரூட் இருக்கிறது என்று காட்டி வென்றிருக்கிறார் பாலாஜி மோகன்.

முழுக்க முழுக்க காதலால் நொந்துபோனவர்களுக்காக வாசிக்கப்பட்ட நையாண்டி மேளம்தான் இந்த கா.சொ.எ?

காதலர் தின நிகழ்ச்சி ஒன்றுக்காக காதலர்கள் அமலாபாலும், சித்தார்த்தும் பேட்டி கொடுப்பதிலிருந்து படம் தொடங்குகிறது...

டி.வி. நிருபர்: சரி சொல்லுங்க... ரெண்டு பேரும் முதமுதல்ல எப்ப எங்க சந்திச்சீங்க?

அமலா: முதல்ல நீ சொல்லுப்பா.

சித்தார்த்: இல்ல முதல்ல நீ சொல்லுப்பா...

அமலா: (சற்றே கோபமாக) அதான் முதல்ல நீ சொல்லுங்கிறேன்ல..

சித்தார்த்: முதல்ல காலேஜ் கேண்ட்டீன்ல சந்திச்சோம். இவங்க அப்ப 'சப்பியா' குண்டா இருந்தாங்க...

அமலா: (கடுப்புடன்) நான் எப்ப 'சப்பியா' குண்டா இருந்தேன்?

சித்தார்த்: இல்லப்பா அப்ப நீ கொஞ்சம் குண்டா அழகா இருந்த. அந்த குண்டு தான் உன்னோட அழகே...

அமலா: அப்ப இப்ப நான் அழகா இல்லைங்கிறீயா?

இந்த உரையாடல் ஒரு பெரும் சண்டையாக மாறி கையில் இருக்கும் கண்ணாடி கிளாஸை வீசி சித்தார்த்தின் மண்டையை உடைக்கிறார் அமலா.

இப்படியே இன்னுமொரு முப்பது காட்சிகளையும், அதன் தொடர்ச்சியாய் அவர்கள சமாதானமாகி பின் மறுபடியும் சண்டை போடுவதையும் சேர்த்துக் கொண்டால், 'காதலில் சொதப்புவது எப்படி?' படத்தின் முழுக்கதையும் உங்களுக்கு கிடைத்துவிடும்.

...பொண்ணுங்க ஒரு பெயிண்டிங் மாதிரி, அவங்க எங்க பாத்தாலும் அது நம்மள பாக்குற மாதிரியே இருக்கும்... அது ஒரு இல்லுயூஷன்...

...பாசத்தையும் சரி,வெறுப்பையும் சரி, பொண்ணுங்க காட்டுற அளவுக்கு பசங்களால என்னைக்குமே காட்டமுடியாது...


...பார்வதியை நான் லவ் பண்றதுக்கு முந்தின நிமிஷம் வரை நாலு பசங்களோட நல்லா சிரிச்சி பேசிக்கிட்டிருந்தேன்....

...அவளை லவ் பண்ணின பின்னாடி என் வாழ்க்கை நாசமாப் போகப்போகுதுங்கிறது அந்த நிமிஷம் வரைக்கும் எனக்குத் தெரியாது...

...அவ எடுத்து என் மண்டையை உடைக்கிறதுக்கு முந்தின நிமிஷம் வரை நம்மளோட காலேஜ் கேண்ட்டீன்ல ஏன் கூல்ட்ரிங்ஸை பேப்பர் கப்ல குடுக்காம கண்ணாடி கிளாஸ்ல குடுக்கிறாங்கன்னு யோசிச்சதில்லை...

...அவ கிட்ட கடைசியா கண்ணாடி கிளாஸ் அடி வாங்குனதிலிருந்து நான் ஒரு 'ஓ.்பிஷியல் லவ் ்.பெயிலியர் கேஸ்'...

இப்படி படம் முழுக்க பட்டய கிளப்பும் வசனங்கள், தத்துவங்கள், மொக்கைகள் சீன் பை சீன் கொட்டிக் கிடக்கின்றன.



- ஹலோ சினிமா

# அதிசயம் பற்றி மேலும் அதிசயங்கள்!



இத்தாலியின் பைசா நகரத்திலுள்ள சாய்ந்த கோபுரம் பற்றிய தகவல்கள் புதிது புதிதாகவும் சுவாரஷ்யமாகவும் வந்துகொண்டேயிருக்கின்றன....

போனானோ பிஸ்ஸானோ என்பவர் 1173இல் இந்த கோபுரத்தைக் கட்ட ஆரம்பித்தாராம். சதுப்பு நிலத்தில் கட்டப்பட்டதால், பத்தரை மீற்றர் உயரம் எழும்பியதுமே, கோபுரம் லேசாகச் சரிய ஆரம்பித்து விட்டதாம்... என்றாலும், இந்தச் சரிவை, கட்டடம் உயர, உயரச் சரி செய்துவிடலாம் என்ற நோக்கில் மூன்று மாடிகள்வரை கட்டி விட்டாராம் போனானோ... அத்துடன் நிறுத்தி விட்டாராம்...

பின்னர், டோமாஸ்ஸோ என்பவர் இந்த வேலையை தொடர்ந்து மேற்கொண்டு, சாமர்த்தியமாக எட்டு மாடிகள் வரை கட்டினாராம்... 1300இல் இது முற்றுப் பெற்றதாம்... மொத்தம் 54 மீற்றர் உயரம். வட்ட வடிவில் அமைந்த எட்டு மாடிகளுக்கும் வெளித் தாழ்வாரங்கள் உண்டு.

ஒவ்வொரு மாடியிலும் உள்ள பல்கனித் தூண்கள், அதற்கு மேல் உள்ள மாடிகளைத் தாங்குகின்றன. விசித்திரம் என்னவென்றால், இத்தனை உயர கோபுரத்துக்கு, மூன்று மீற்றர் ஆழம் தான் அத்திவாரம் போட்டார்களாம்.

கோபுரம் இன்று செங்குத்து நிலையிலிருந்து நாலு மீற்றர் சாய்ந்து நிற்கிறது. உள்ளுக்குள், 293 படிகளைக் கொண்ட சுழல் மாடிப்படி அமைந்திருக்கிறது. உச்சியில் ஒரு மணிக்கூண்டு இருக்கிறது...

சாய்ந்த கோபுரத்தை இன்று ஆராய்ந்து பார்க்கிற விஞ்ஞானிகள், அதைக் கட்டி முடித்தவனின் மேதா விலாசத்தை எண்ணி, எண்ணி பிரமித்துப் போகிறார்களாம்...

பேராசிரியர் பேர்லண்ட் என்பவர் சொல்கிறார்... "கோபுரம் சரியும் என்பது, இதைக் கட்டியவர்களுக்கு தெரிந்தே இருந்திருக்கிறது. சாய்ந்தாலும், சரிந்து விடக் கூடாது என்று திட்டமிட்டு வேலை செய்திருக்கின்றனர் என்பது இக்கட்டடத்தை ஆராயும் போது புரிந்து கொள்ள முடிகிறது. உதாரணமாக, தென் பகுதியில் இருப்பதை விடவும், வடக்குப் பகுதியில் உள்ள சுண்ணாம்புக் கல் பாளங்கள், ஒரு செ.மீ. மெல்லியதாக உள்ளன. நாலாவது மாடியை அவர்கள் அடைந்தபோது, திட்டமிட்டுப் பத்து செ.மீ. கனம் குறைவான பாளங்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றனர்... இதிலிருந்தே சாய்மானத்தைத் தடுக்க முயன்றிருக்கின்றனர் என்பது புரிகிறது..." என்றிருக்கிறாராம்!

ஐந்தாவது மாடியைக் கட்டும் போது, ஒரு விசித்திரம் நிகழ்ந்ததாம்... கோபுரம் நேராக நிமிர ஆரம்பித்ததாம்... இதன் காரணம் உறுதியாகத் தெரியவில்லையாம். ஒருவேளை, சதுப்பு நிலத்தின் களிமண் கெட்டிப்பட்டிருக்கலாம் என்கின்றனர்... கட்டி முடிக்கப்பட்ட போது கோபுரம் வடக்குப் புறமாகத் தான் லேசாகச் சாய்ந்திருந்ததாம்... இப்போது உள்ளது போல் தெற்குப்புறம் அல்லவாம்...

சரிவை நிமிர்த்தி விடலாம் என்று சிலர் முயற்சி எடுத்த போதெல்லாம், கோபுரம் மேலும் சற்றுச் சரிந்து பீதி கிளப்பியிருக்கிறதாம்... உதாரணமாக, 1920இல் கோபுரத்தைச் சுற்றி, ஒரு நடைபாதை தோண்டினார்களாம்... உடனே, கோபுரத்தின் சரிவு கூடியது.

1930இல் முசோலினி இந்தக் கோபுரத்தின் அத்திவாரத்துக்குள், 800 தொன் சிமெந்தை, விசைப் பம்ப்களைப் பயன்படுத்திச் செலுத்தினாராம். அத்திவாரத்தைப் பலப்படுத்தலாம் என்ற கருத்தில் எடுக்கப்பட்ட இந்த முயற்சி, கோபுரம் மேலும் சற்று சரியவே காரணமாயிற்றாம்...

சமீபத்தில், கோபுரத்தில் பல நவீன கருவிகளைப் பொருத்தி ஆராய்ந்தனராம்... கம்ப்யூட்டர்களுடன் இணைக்கப்பட்ட இந்த அதி நவீன தானியங்கிக் கருவிகள், மேலும், பல அதிசயத் தகவல்களை விஞ்ஞானிகளுக்குத் தெரிவித்துள்ளன....

அதாவது, சூரியோதயத்துக்குப் பிறகு, வெயில் ஏற, ஏற, கோபுரம் லேசாக - அரை மில்லி மீற்றர் அளவுக்கு - சுழல்கிறது என்பது தான். இதன் காரணமாகவே கோபுரம் அதிர்கிறது என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்!

தற்போது, இரண்டு தற்காலிக ஏற்பாடுகளையும் செய்துள்ளனர் கோபுரம் சாயாமல்இருக்க! இரும்புக் கம்பிகளை பிளாஸ்டிக் உறையிட்டுத் தயாரித்து, அவற்றை அடிவாரத்தில், கோபுரத்தைச் சுற்றிப் பிணைத்திருக்கின்றனர். இது கோபுரத்தின் சாய்மானத்தைக் கணிசமாகத் தடுக்கும் என்று கருதப்படுகிறது.

பிளாஸ்டிக் உறையிலிருப்பதால், கம்பி சுற்றியிருப்பதே பார்வையாளருக்குத் தெரியாது. தவிர, தென்புறம அத்திவாரத்தின் மீது ஏற்படும் அழுத்தத்தைச் சமன் செய்ய, வடக்குப்புறம், 800 தொன் எடையில் ஈயம் பூமிக்குள் இறக்கத் திட்டமிட்டு இருக்கிறார்களாம்....

- ஆச்சரியம்தான்!


# செல்வராகவன் படத்தில் அனுஷ்கா



செல்வராகவன் படத்தில் நடிகை அனுஷ்கா இரட்டை வேடத்தில் நடிக்கிறார். செல்வராகவன் இயக்கும் புதிய படம் "இரண்டாம் உலகம்". இப்படத்தின் ஹீரோவாக ஆர்யா நடிக்கிறார். அனுஷ்கா இரட்டை வேடத்தில் நடிப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. ஒரு வேடத்தில் வெகுளிப் பெண்ணாகவும், இன்னொரு வேடத்தில் ஆக்ரோஷமான பெண்ணாகவும் கதை உருவாக்கப்பட்டுள்ளதாம். அருந்ததீ படத்தில் அனுஷ்காவின் ஆக்ரோஷ நடிப்பை பார்த்து பலரும் பிரமித்துப் போய் நின்றார்கள். அதைவிட ஆக்ரோஷமான கதாபாத்திரத்தில் அனுஷ்கா தோன்றவிருப்பதாக இரண்டாம் உலகம் தகவல்கள் தெரிவிக்கின்றன.

"இரண்டாம் உலகம்" படத்தில் முதலில் தனது தம்பி தனுஷுக்கே செல்வராகவன் வாய்ப்பளித்திருந்தார். தனுஷும், ஆண்ட்ரியாவும் நடிப்பதாக இருந்தது. சோனியாவை செல்வராகவன் விவாகரத்து செய்வதற்கு இந்த ஆண்ட்ரியாதான் காரணம் என்று கூறப்பட்டதால் அதுகுறித்து தனுஷுக்கும், ஆண்ட்ரியாவுக்கும் தகராறு ஏற்பட்டதாகவும் ஆண்ட்ரியா படத்திலிருந்து வெளியேறிய தாகவும் கூறப்பட்டது.

இந்நிலையில்தான் செல்வராகவன், தனது உதவி இயக்குனர் கீதாஞ்சலியை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். ஆண்ட்ரியாவுக்கு பதிலாக "மயக்கம் என்ன" ரிச்சாவை நாயகியாக்கி படப்பிடிப்பை நடத்தியிருக்கிறார்.



ஏற்கனவே ஆண்ட்ரியாவுடன் நடித்த அதே காட்சியை புதுமுகம் ரிச்சாவுடன் நடிக்கும் படி அண்ணன் கேட்டதால் கோபமடைந்த தனுஷ், நீ கேட்கும் போதெல்லாம் திரும்பத் திரும்ப என்னால் திகதி தர முடியாது என்று கூறிவிட்டாராம். அண்ணன் இல்லாமல் நானில்லை என்று சொல்லிக் கொண்டிருந்த தனுஷ், "கொலைவெறி" பாடலுக்குப் பிறகு, "அண்ணன் என்னடா தம்பி என்னடா பிரபலமாகும் உலகத்திலே" என்று மாறிவிட்டார். இதனால் மோதல் முற்றியிருக்கிறது.

ரிச்சாவுடன் சில காட்சிகள் மட்டும் படமாக்கப்பட்ட நிலையில், மீண்டும் ஹீரோயினை அதிரடியாக மாற்றியிருக்கிறார் செல்வராகவன். இப்போது தனுஷுக்குப் பதிலாக ஆர்யா. ரிச்சாவுக்குப் பதிலாக அனுஷ்கா என்று திரும்பவும் முதலிலிருந்து படப்பிடிப்பை நடத்தி வருகிறார் செல்வராகவன். இந்த "இரண்டாம் உலகம்" படம் தெலுங்கிலும் ஒரேசமயத்தில் உருவாகிறது.

## அவசிய ஆபத்து.... செல்போன்....



"அளவுக்கு மிஞ்சினால் அமிர்த மும் நஞ்சு" செல்போனில் இருந்து வெளி யாகும் கதிர்வீச்சினால் புற்றுநோய் ஏற் படும் ஆபத்து இருப்ப தாக விஞ்ஞானிகள திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளனர்.

உலக சுகாதார அமைப்பின் ஒரு அங்க மான சர்வதேச புற்றுநோய் ஆராய்ச்சி மையத்தின் ஆய்வின்படி, செல்போன் களில் தொடர்ச்சியாக பேசுபவர்களுக்கு மூளையில் புற்றுநோய் கட்டி உருவாகும் அபாயம் உள்ளது. மேலும் செவிகளில் உள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டு காது கேட்கும் திறன் குறைவதாக தெரிவிக் கப்பட்டுள்ளது. Electirb MagNetic Field எனப்படும் மின்காந்த தளம்தான் இத்தகைய பாதிப்பு ஏற்பட காரணம் என்று தெரிய வந்துள்ளது. செல்போனில் அதிக நேரம் தொடர்ச்சியாக பேசுகையில், மிருதுவான காது வழியாக மூளையை மின்காந்த அலைகள் எளிதில் தாக்கக் கூடிய அபாயம் உள்ளது.

செல்போன் கோபுரங்களைச் சுற்றி சுமார் 300மீற்றர் சுற்றளவில் வசிப்பவர்களுக்கு கூட பாதிப்புகள் உள்ளன. புற்றுநோய் தொடர்பான விஷயங்கள் இன்னும் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்றாலும், கதிர்வீச்சு ஆபத்துக் கிடையாது என்று யாராலும் அடித்துச் சொல்ல முடியாது. பல பறவை இனங்கள் கதிர்வீச்சால் சிறிது சிறிதாக அழிந்து வருவதாகவும் ஒரு ஆராய்ச்சி தெரிவித்துள்ளது.

செல்போன்களில் இருந்து வெளிப்படும் கதிர்வீச்சால் தலைவலி, தூக்கமின்மை, ஞாபகமறதி, சோர்வு, மூட்டுவலி, மரபணு பாதிப்பு ஏற்படும் என்றும், தாய்மை காலங்களில் பெண்கள் செல்போனை பயன்படுத்தினால் கருவில் இருக்கும் குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படும் என்றும் மற்றொரு ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

செல்போன் மட்டுமல்லாது மேலும் பல நவீன சாதனங்களும் கதிர்வீச்சை வெளிப்படுத்துகின்றன. போட்டோபிரதி இயந்திரம், கணினி, தொலைநகல் மற்றும் பிற கருவிகளின் அருகில் பணிபுரிபவர்களும் இத்தகைய கதிர்வீச்சுக்கு அதிகமாக ஆளாகிறார்கள் என்கிறது ஒரு அதிர்ச்சி தகவல். புற்றுநோய் ஏற்படுத்தக் கூடிய அபாயகரமான பொருட்களில் குரூப்-1 ரகத்தில் சிகரெட் புகையிலை போன்ற பொருட்கள் இடம்பெற்றுள்ளன. குரூப் -2 எனப்படும் புற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ள குளோரோபோம், பெட்ரோலிய பொருட்களின் வரிசையில் தற்போது செல்போனும் இடம்பெற்று விட்டது.

## துரோகி முத்திரை குத்தப்பட்டவர்களிடமே இந்நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது!

பிரபாகரனின் அரசியலில் தமிழ் சமூகத்தின் துரோகிகள் முத்திரை குத்தப்பட்டனர். மகிந்த ராஜபக்ஷவும் தனது அரசியலில் துரோகிகளை உருவாக்கிக் கொண்டார்.

இவ்வாறு துரோகிகளை முத்திரை குத்துவோர் அடையாளத்துவ அரசியலை விட தேசிய அரசியலை விரும்பினர். தமிழ் அரசியலின் துரோகிகளாகக் கருதப்படும் நீலன் திருச்செல்வம், ஆனந்தசங்கரி ஆகியோர் பரந்தளவிலான அரசியலைப் பற்றிப் பேசுகின்றனர்.

அதேபோல் தென்னிலங்கை இடதுசாரித் தலைவர்கள், சமாதானவாதிகள், துரோகிகள் என்று முத்திரை குத்தும் அரசியல்வாதிகளும் இவ்வாறான பரந்தளவிலான அரசியல் பற்றியே பேசுகின்றனர்.

ஆனால் துரோகிகள் என்றும் காட்டிக்கொடுத்தவர்கள் என்றும் முத்திரை குத்தப்பட்டவர்களிடமே வடக்கினதும் தெற்கினதும் எதிர்காலம் தங்கியிருக்கின்றமை விதியின் விளையாட்டு என்றே கூறமுடியும்.

தமிழ் தனிநாட்டைக் கோரியவர்களுக்கும் ஒற்றையாட்சி தனி சிங்கள அரசைக் கோரியவர்களுக்கும். இருக்கும் ஒரே ஒரு வழி இலங்கை தேசியத்தைக் கட்டியெழுப்புவதே என்று கூற வேண்டியுள்ளது.

இதனைத் தவிர இருக்கும் ஒரே மாற்று வழி போர் செய்து ஒருவரையொருவர் கொல்லுவதே. கொலைகளையும் நாம் இப்பொழுது பரீட்சித்துப் பார்த்துள்ளோம். இர்ா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த யதார்த்தத்தினைப் புரிந்துகொண்டு செயற்படுவதனை அக்கட்சியின் அண்மைக்கால செயற்பாடுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இது துரோகச் செயலாகவே Pan Tamil Nationalism நம்பிக்கை கொண்டவர்களால் கருதப்படும். சிங்களத் தேசியத்துவ அரசியலின் அடிப்படையிலேயே இது தீர்மானிக்கப்படும்.

சம்பந்தன் தரப்பினரை துரோகிகளாக்குவது தெற்கின் அரசியலைப் பொறுத்த ஒரு விடயமாகும். அடையாளத்துவ அரசியலில் சம்பந்தன் தரப்பு சிக்கியிருந்தால் மட்டுமே இந்த நிலை ஏற்படும். அது அவ்வாறு நிகழ்வதற்கான வாய்ப்புகளும் அதிகமாகும். ஏனெனில் அடையாளத்துவ அரசியலுக்கு வர்க்க அரசியலை விட இலகுவில் வாக்குகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.



சம்பந்தன் தரப்பு வர்க்க அரசியலுக்கு மாறினால், தெற்கில் அவர்களுக்கு சகோதரத்துவம் பரிசாகக் கிடைக்கும். ஆனால் அதற்கு எதிராக அடையாளத்துவ அரசியல் குறித்து தீர்மானிக்க தற்போது அழுத்தம் வழங்கப்படுகின்றது.

நீண்டகால ஸ்திரத்தன்மையா தற்காலிக குழப்பநிலை அரசியலா என்று தீர்மானிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

- ஷிரால் லக்திலக்க கட்டுரையிலிருந்து.

# கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம் ; எரிபொருள் விலை அதிகரிப்புக்கு கண்டனம்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் அதிகரிப்பு ஆகியவற்றைக் கண்டித்தும் மேற்படி விலைகளையும் கட்டணங்களையும் உடனடியாகக் குறைக்குமாறு வலியுறுத்தியும் தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பாரிய ஆர்ப்பாட்ட எதிர்ப்புப் பேரணி இன்று திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் பிற்பகல் 4 மணியளவில் ஆரம்பமாகும் எதிர்ப்பு பேரணியில், நாட்டில் உள்ள பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புகள் கலந்து கொள்ளவிருப்பதாக தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

நாட்டிலுள்ள அனைத்து தொழிற்சங்கங்களும் இதில் கலந்து கொள்ளுமாறு பகிரங்க அழைப்பு விடுப்பதாகவும் அவர் கூறினார்.

அத்துடன் மேற்படி ஆர்ப்பாட்ட எதிர்ப்புப் பேரணிக்கும் ஜே.வி.பி. கட்சிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது எனத் தெரிவித்த லால்காந்த, உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகவும் ஏற்றி வைக்கப்பட்டுள்ள வாழ்க்கைச் சுமையை இறக்கி வைப்பதற்காகவும் நடத்தப்படுகின்ற எதிர்ப்பு நடவடிக்கை இதுவென்றும் அவர் விளக்கமளித்தார்.

கொழும்பு தேசிய நூலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# ஆணைக்குழுவின் சிபார்சுகள் அமுல் செய்வது தாமதம்

## நெருக்கடிக்கு அதுவே காரணம் என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஜெனிவா கூட்டத்தொடரில் அரசுக்கு எதிராகவே குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றது.

இலங்கை நாட்டுக்கு எதிராக அல்ல என்றும் ஆணைக்குழுவின பரிந்துரைகளை அமுல்படுத்தாமல் தொடர்ந்தும் அரசாங்கம் காலதாமதம் செய்வதன் காரணமாக நாடு பல நெருக்கடிகளை முகம் கொடுக்க வேண்டியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சி தெரிவித்துள்ளது.

கண்டியில் இடம்பெற்ற நிகழவொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லகஷ்மன் கிரியல்ல இவ்வாறு குறிப்பிட்டார்.

ஜெனிவா மனித உரிமைகள் தொடர்பான கூட்டத் தொடரில், இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக குற்றம் சுமத்தப்படுகிறதே அன்றி நாட்டிற்கு எதிராக அல்லவென்றும் இது அரசுக்கே அவமானம் என்றும் அவர் தெரிவித்தார்.

# புலிகளுக்குச் சார்பாக ரணில் செயற்படுகிறார்

## ஹெல உறுமய சீற்றம்

(கொழும்பு)



புலி ஆதரவாளர்களுக்கு தேவையான வகையில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க செயற்படுகின்றார் என ஜாதிக ஹெல உறுமய கட்சியின் தலைவர் ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

ரணில் தேசிய பொறுப்புக்களை கவனத்தில் கொள்ளாது செயற்படுகின்றார். மேலும், புலி ஆதரவாளர்களுக்கு தேவையான வகையில் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பு ஏற்படுத்த முயற்சிக்கின்றார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, படைவீரர்கள் உயிர்த் தியாகம் செய்து பெற்றுக்கொண்ட வெற்றியை உதாசீனம் செயய இடமளிக்க முடியாது. ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடாத போதிலும், வேறு வழிகளில் எமக்கு எதிராக குற்றச்சாட்டுக்களை சுமத்த முடியும்.

ரோம் பிரகடனத்தில் கைச்சாத்திடாததன் மூலம் ஜனாதிபதிக்கோ படைவீரர்களுக்கோ எதிராக நடவடிக்கை எடுக்கப்பட முடியாது எனவும், ரணில் பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகவும் சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

# உலக சாதனை முயற்சி ; இளைஞனின் உயிர் பறித்தது

(கொழும்பு)

உலக சாதனை நிகழ்த்துவதற்கான பயிற்சிகளில் ஈடுபட்டு உயிரிழந்த இளைஞன் ஒருவரின் சடலம் பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கந்தளாய் - வான்எல பிரதேசத்தைச் சேர்ந்த சிவில் பாதுகாப்புப் படை உறுப்பினர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார. சுமார் நான்கு மணித்தியாலம் பூமிக்குக் கீழ் புதைந்திருந்து உலக சாதனை நிகழ்த்துவதற்கு குறித்த இளைஞன் முயற்சித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

தன்னால் வெட்டப்பட்ட குழிக்குள் குறித்த நபர் இறங்கிய பின்னர், அவரின் உறவினர்க்ள் மற்றும் நண்பர்களின் ஒத்துழைப்புடன் பலகைகள் வைக்கப்பட்டு, மண்ணினால் அந்தக் குழி மூடப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து குழிக்கு மேல் தீ மூட்டப்பட்டதுடன், நான்கு மணித்தியாலங்களின் பின்னர் அவரது ஆலோசனைகளுக்கு அமைய அநதக் குழி திறக்கப்பட்டுள்ளது.

குழி திறக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இளைஞன் மயக்கமுற்றிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த இளைஞன் அயலவரின் ஒத்துழைப்புடன் கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் கூறினர்.

கந்தளாய் - வான்எல - பன்சல கொடேல்ல பிரதேசத்தைச் சேர்நத 24 வயதான இளைஞனொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

# சொகுசு பேருந்துகளுக்கு தர நிர்ணயம்

## நாடு முழுவதும் நடவடிக்கை

(கொழும்பு)

நாடு முழுவதும் சேவையில் ஈடுபடும் சொகுசு பேருந்துகளை தர நிர்ணயத்துக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதன் முதற்கட்டமாக நாட்டில் சேவையில் ஈடுபடும் சகல சொகுசு பேருந்துகளின் தரங்கள் தொடர்பில், பரிசோதனை மேற்கொள்ள இருப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் ரொஷான் குணவர்தன இதனைத் தெரிவித்தார்.

போக்குவரத்தில் ஈடுபடும், சொகுசு பேருந்துக்கள் தொடர்பில் பாரிய எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனைத் தவிர, தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் சகல வாகன சாரதிகளும், இருக்கைப் பட்டியை அணிவது அவசியமாக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம்களுக்கு தனி அலகு இது நியாயமற்ற கோரிக்கை

(அம்பாறை)



வடக்கும் கிழக்கும் இணைந்திருக்கும் போதுதான் முஸ்லிம்களுக்கு தனியலகு தேவையாக இருந்தது. கேட்டதில் நியாயமும் இருந்தது. ஆனால் இன்று இரு மாகாணங்களும் பிரிந்து தனித்தனியாக இயங்குவதால் முஸ்லிம் தனி அலகு என்ற தேவை இல்லாது போய்விட்டது. இப்போதும் எவராவது இது பற்றிப் பேசுவார்களேயானால் அது அவர்களது அரசியல் தேவைகளுக்காகவே என்று கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்பேசும் மக்களுக்கு தீர்வு ஒன்று காணப்படும் நிலையில் இதனை ஒரு பிரச்சினையாக எழுப்பி அரசியல் இலாபம் தேட எவரும் முனையக்கூடாது.

இரு மாகாணங்களும் இணைந்திருந்த போது தமிழ் மக்களது விகிதாசாரம் அதிகமாக இருந்தது. அதனால் அவரகள் கேட்டதில் நியாயம் இருந்தது. கட்டாயம் கொடுத்திருக்கவே வேண்டும்.

ஆனால், இன்று கிழக்கு தனியாக உள்ளது. இங்கு தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றாக சகோதரர்களாக வாழ்கினறனர். இவர்களைப் பிரிக்க எவரும் அரசியலைப் பயன்படுத்தக்கூடாது என்பதே வேண்டுகோளாகும் எனவும் சந்திரகாந்தன் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார்.

தனது இந்த நிலைப்பாட்டை கிழக்கிலுள்ள சகல முஸ்லிம் தலைவர்களும் நிச்சயம் ஏற்றுக்கொள்வர் எனத் தெரிவித்த அவர், தனது நிர்வாகத்தில் முஸ்லிம்களுக்கு சகல விதமான விடயங்களிலும் சமமான அந்தஸ்து வழஙகப்பட்டுள்ள தாகத் தெரிவித்துள்ளார்.

இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது தமிழருக்கு மட்டுமான ஒன்றல்ல. அது தமிழ் பேசும் முஸ லிம்களையும் அரவணைத்த ஒரு விடயமே. எனவே இருதரப்பும் இணைந்தே ஒற்றுமையாகத் தீர்வினைப் பகிர வேண்டும். அதற்கு முட்டுக்கட்டையாக ஒரு தரப்பிற்கு மறுதரப்பு எவ் வகையிலும் ஈடுபடக்கூடாது எனவும் சந்திரகாந்தன் தனது பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# மருந்து வகைகளுக்கு வருகிறது உடனடித்தடை

(கொழும்பு)



நோய் எதிர்ப்புச் சக்தியைத் தோற்றுவிக்கும் சில மருந்து வகைகளுக்கு சுகாதார அமைச்சு தடை விதித்துள்ளது.

உடனடியாக அமுலாகும் வகையில் மெரப்பன மற்றும் கோ அமக்சிக்குளோ எனப்படும் நோய் எதிரப்பு ஔடதங்களை உபயோகிப்பதை கொழும்பு டீ சொய்சா மகப்பேறு மருத்துவமனையில் தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

இந்த மருந்தை உபயோகிக்கப்பட்டதன் பின்னர் ஒரு தாய் மரணித்ததை அடுத்தே இந்தத் தடை அமுல்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் ஔடத கட்டுப்பாட்டுப் பிரிவின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார்.

குறித்த தாயின் மரணம் இந்த ஔடதத்தை உபயோகித்ததன் காரண மாகவே சம்பவித்ததாக பிரேத பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. இதனைத் தொடர்ந்தே இந்த தீர்மானம் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆரம்ப பாடசாலைகள் விரைவில் தரம் உயரும்


(கொழும்பு)

ஆயிரம் பாடசாலைத் திட்டத்துடன் இணைக்கக் கூடிய 5000 ஆரம்பப் பாடசாலைகளைத் தெரிவுசெய்து அவற்றை உயர்தரத்திற்கு மேம்படுத்த் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் கீழ் 50 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள 1590 பாடசாலைகள் உட்பட 6500 பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப கல்வி வசதியளிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

3 வருட திட்டத்தின் கீழ் மேற்படி பாடசாலைகளுக்கு தகவல் தொழில் நுட்பக்கல்வி, இன்டர்நெட் வசதி, கணினி, கல்வி என்பனவும் வழங்கப்படவுள்ளதோடு 2 ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சியும் வழங்கப்படும்.

பதுளை மற்றும் யாழ். மாவட்டங்களில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு 2 வருட காலத்தில் நாடு பூராவும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படும்.




தியதலாவையில் உள்ள அரசாங்க பாதுகாப்பு பீடத்தில் "எமது பயணம்" என்ற தலைப்பில் ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் அரசில் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாநாடு ஒன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி விளக்கம் அளித்தார். பிரதமர் டி.எம்.ஜயரத்ன உட்பட சகல அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்த மாநாட்டில கலந்துகொண்டனர்.

06) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களின் என்ன பின்னம்?

.................................................................................................


14)




1) அருகேயுள்ள படத்தில் உள்ள பென்சிலின் நீளம் என்ன?

.................................................................

2)




அருகே காட்டப்பட்டுள்ள உருவின்,


1) சுற்றளவு யாது?..........................................................

2) பரப்பரளவு யாது?..........................................................

3) 150 ml குளிர்பானத்தை 2 பேருக்கு வழங்கலாம். 41 பேர் கலந்துகொள்ளும் விழா ஒன்றுக்கு வழங்கத் தேவைப்படும் குளிர்பானத்தின் அளவைக் காண்க.

.................................................................................................

4)



அருகேயுள்ள சதுரத்தில் எத்தனை செங்கோணங்கள் உள்ளன?

.................................................................................................


5) பெட்டி ஒன்றில் 416 மாம்பழங்கள் உண்டு. அதனை நான்கு பெட்டிகளில் சமனாக இட்டால் ஒரு பெட்டியில் எத்தனை மாம்பழங்கள் வைக்கலாம்?

.................................................................................................

6) 300 g கடலையின் விலை ரூபா 36 எனின், 1 kg கடலையின் விலை யாது?

.................................................................................................

7)



உருவில் நிழற்றப்பட்ட பகுதியைத் தசம எண்ணாக எழுதுக.

.................................................................................................

8) 1. ஒருவனுக்கு 6 பென்சில்கள் வீதம் 650 பென்சில்களை எத்தனை பேருக்குக் கொடுக்கலாம்?

.................................................................................................

2. அவ்வாறு கொடுத்த பின்னர் எத்தனை பென்சில் எஞ்சி இருக்கும்?

.................................................................................................

9) கூட்டுக. $1/4 + 3/8$ ...........................................................

10) சில நகரங்களுக்கிடையேயுள்ள தூரங்கள் பின்வரும் உருவில் கிலோமீற்றரில் தரப்பட்டுள்ளன.

| | காலி | கொழும்பு | புத்தளம் |
|---|---|---|---|
| கொழும்பு | | | 142 |
| காலி | | 116 | 258 |
| மாத்தறை | 45 | 161 | ................ |

மாத்தறையில் இருந்து காலி, கொழும்பு ஊடாக புத்தளத்திற்கு உள்ள தூரம் யாது?

.................................................................

## கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வெளியீடு - 35 கேள்விகளின் விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01) 1 | 06) 2 | 11) 1 | 16) 1 | 21) 1 | 26) 1 | 31) 2 |
| 02) 2 | 07) 2 | 12) 3 | 17) 2 | 22) 3 | 27) 2 | 32) 3 |
| 03) 3 | 08) 2 | 13) 1 | 18) 2 | 23) 1 | 28) 2 | 33) 2 |
| 04) 3 | 09) 2 | 14) 2 | 19) 3 | 24) 2 | 29) 2 | 34) 1 |
| 05) 3 | 10) 3 | 15) 2 | 20) 1 | 25) 1 | 30) 1 | 35) 2 |





# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு

வெளியீடு 36



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

**01) கீழுள்ள கதைப் பகுதியை வாசித்து 1 - 7 வரையிலான வினாக்களுக்கு விடைதருக.**

ஒரு பெரிய காட்டில் பெரிய நரி ஒன்று வசித்து வந்தது. அங்கே நிறைய முயல்கள் வாழ்ந்து வந்தன. முயல்களைப் பிடித்துத் தின்று கொழுத்திருந்த நரி ஒரு நாள் பெரிய புதர் ஒன்றில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தது. அப்போது காடே அதிரும்படியான ஒரு பெரிய உறுமல் சத்தம் கேட்டது. அதைக் கேட்ட நரி திடுக்கிட்டு எழுந்தது. அதைப் பயம் பிடித்துக் கொண்டது. புதரிலிருந்து மெல்ல தலையை நீட்டி வெளியே சுற்றும் முற்றும் பார்த்தது.

சிறுத்தை ஒன்று வாயில் முயலைக் கௌவியபடி காட்டுக்குள் சென்று கொண்டிருந்தது. அது ஒரு மரத்தடியில் நின்று முயலைத் தின்றது. அங்கேயே படுத்து சுகமாக ஒரு தூக்கம் போட்டது.

01) இக்கதைப் பகுதிக்குப் பொருத்தமான ஒரு தலைப்பை எழுதுக.

.................................................................................................

02) இணைமொழிச் சொல் ஒன்று எழுதுக.

.................................................................................................

03) அஃறிணைப் பன்மைப் படர்க்கை இறந்தகாலச் சொல் ஒன்று தருக.

.................................................................................................

04) அடவியில் என்ற பதத்திற்குப் பொருத்தமான ஒத்தசொல் ஒன்றைப் பந்தியில் இருந்து தருக.

.................................................................................................

05) அஃறிணைப் பன்மை படர்க்கைப் பெயர்ச் சொல் ஒன்று தருக.

.................................................................................................

06) தூக்கம் என்பதன் எதிர்ப்பொருள் யாது?

.................................................................................................

07) "காடே அதிரும்படியான ஒரு பெரிய உறுமல் சத்தம் கேட்டது" என்பதில் உறுமல் சத்தத்திற்கு உரியது எது?

.................................................................................................

**02) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி எழுதுக.**

01) கொள்வதற்கு / செய்தித்தாள்கள் / நாம் / அறிந்து / உதவுகின்றன / செய்திகளை

.................................................................................................

02) கணனியின் / மூளைக்கு / ஒப்பாகும் / மனிதனுடைய / மையச்செயலகம்

.................................................................................................

**03) பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.**

01) உப்பிட்டவரை உள்ளளவும் நினை..........................................................

02) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்..........................................................

**04) பின்வரும் தொடர்பின் கருத்தை வெளிப்படுத்தும் தனிச்சொல்லை எழுதுக.**

01) கடவுள் இல்லை என்று வாதிடுபவர் ..........................................................

02) நெடுங்காலம் வாழ்பவன்..........................................................

**05) பின்வரும் வினாக்களில் காணப்படும் தொடர்பிற்கேற்ப சரியான விடையை எழுதுக.**

| | | |
|---|---|---|
| 01) மாணவர் : பாடசாலை | வைத்தியர் | :................................ |
| 02) கப்பல் : கடல் | விமானம் | :................................ |
| 03) நாய் : குரைக்கும் | மயில் | :................................ |
| 04) பார்த்தல் : கண் | நுகர்தல் | :................................ |
| 05) அவதானித்தல் : தொலைக்காட்சி | வானொலி | :................................ |

**06) பின்வரும் ஒவ்வொரு ஆங்கிலச் சொல்லினதும் கருத்தை எழுதுக.**

01) முகில்கள் ................................ 02) நீர்வீழ்ச்சி ................................

03) தபாற்காரன் ................................ 04) முத்திரை ................................

05) பலூன் ................................ 06) யன்னல் ................................

**07) பின்வரும் தொடர்களின் கருத்தினைத் தமிழில் எழுதுக.**

01) Where do you live?................................ 02) Please stand up ................................

03) May I come in ................................


**08) பின்வரும் ஒவ்வொரு சிங்களச் சொல்லினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.**

01) கொலப(ட்)ட ................................ 02) புஸ்தகாலய ................................


**09) கீழே விளையாட்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள் சில தரப்பட்டுள்ளன. இவை எந்த விளையாட்டு களுக்குரியவை எனத் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.**








01. ................................ 02. ................................ 03. ................................





04. ................................ 05. ................................

**10) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் 'R' எனவும் பிழையாயின் 'W' எனவும் புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) பாதசாரிகள் எப்போதும் மஞ்சள் கோட்டுக் கடவையின் ஊடாகக் கடத்தலே பாதுகாப்பானது. (............)

02) இலங்கையின் சர்வதேச விமான நிலையம் கட்டுநாயக்காவில் அமைந்துள்ளது. (............)

03) வியாபாரத்திற்கு விளம்பரங்கள் மிகவும் அவசியம். (............)

04) விமானத்தை ரைட் சகோதரர்கள் முதன் முதலில் கண்டு பிடித்தார்கள். (............)

05) சுத்தமான நீரிலேயே டெங்கு நுளம்புகள் முட்டையிட்டு பெருகுகின்றன. (............)

**11) பொருத்தமான சொல் கண்டு இடைவெளியை நிரப்புக.**

மண்ணெண்ணெய், கைப்பிடி, ஓயில், பொலித்தீன், பிளாத்திக், துவிச்சக்கரவண்டி

01) துவிச்சக்கர வண்டியை விரும்பிய திசையில் திருப்ப................................உதவும்.

02) ஆடையில் படிந்த தார்க்கறையை அகற்ற................................பயன்படுத்தலாம்.

03) சூழலை மாசடையச் செய்யாத, சிக்கனமான பிரயாணத்திற்கு................................உதவும்.

04) பெற்றோல் ................................என்பன ஒன்றுடன் ஒன்று கலக்கும் தன்மையுள்ள திரவங்களாகும்.

05) ................................பொருட்கள் நீண்ட காலம் மண்ணுள் இருப்பினும் பழுதடையாது.

**12) சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01) பின்வருவனவற்றுள் பாரங்களை மேலே உயர்த்தவும் விரும்பிய இடத்தில் வைக்கவும் பயன்படும் கருவி.
1. மின்உயர்த்தி 2. கப்பி 3. பாரந்தூக்கி

02) காய்கறி புதிய பழங்கள் என்பவற்றில் அதிகளவில் காணப்படுவது,
1. கனிப்பொருள் 2. விற்றமின் 3. மாப்பொருள்


03) பயிர் வகைக்கு இரசாயனப் பசளை இட்ட பின்பு நீர் ஊற்றாதிருந்தால் யாது நடைபெறும்?
1. தாவரம் செழிப்பாக வளரும் 2. தாவரம் வாடிப்போகும் 3. மண் கறுப்பு நிறமாகும்

04) விளையாட்டுப் போட்டிகளில் ஒரு ஓட்ட நிகழ்ச்சி ஆரம்பிப்பதற்கு வழங்கப்படும் முழுக் கட்டளையையும் சரியான ஒழுங்கில் காட்டுவது,
1. ஆயத்தம் - ஆரம்பம் - ஓடு 2. ஓடு - ஆரம்பம் - ஆயத்தம் 3. ஆரம்பம் - ஆயத்தம் - ஓடு

05) அகழ்வுக் கைத்தொழிலில் மாணிக்கக் கற்கள் தாதுக்கள் கொண்ட கூடையின் பெயர்,
1. மடி 2. நாம்புவ 3. பத்திரியு

06) இஸ்லாம் மார்க்கத்தின் சமய வழிபாட்டிடத்தின் பெயர்,
1. மஸ்ஜித் 2. ஜிகாத் 3. சலாம்

07) பின்வருவனவற்றுள் நீளமான காயுடைய மரம்,
1. பயறு 2. முருங்கை 3. வெண்டி

08)  அருகே காட்டப்பட்டுள்ள கரை அலங்கார அமைப்பின் பெயர்,
1. சீப்புரு 3. பூவும் மொட்டும் 3. அரும்பு

09) சித்திரப் பாடத்தில் தந்திக்கம்பம் ஒன்றை வரைய என்ன ரேகையைப் பயன்படுத்துவீர்?
1. செங்குத்து ரேகை 2. அரை ரேகை 3. கோண ரேகை

10) சிறு நூலோடல் தையல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பம்,
1. பொத்தல்கள் தைக்க 2. அலங்காரச் சுருக்கினை ஏற்படுத்த
3. மடித்த விளிம்புகள் குலையாமல் இருக்க

**13) ஒரு கிராமத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடந்த வருடம் 5 ஆம் ஆண்டில் 642 மாணவர்கள் கல்வி கற்றனர். புலமைப்பரிசில் பரீட்சைக்கு 42 மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவில்லை. இப்பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 3/5 பங்கினர் சித்தியடைந்துள்ளனர்.**

01) இப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் எத்தனை பேர்?
................................................................

02) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மணவர்கள் எத்தனை பேர்?
................................................................

03) புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர்?
................................................................

04) பரீட்சைக்குத் தோற்றாத சித்தியடையாத மாணவர்கள் எத்தனை பேர் மீண்டும் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்?
................................................................

05) ஒரு பாடசாலையில் இருந்து சித்தியடைந்த மாணவர்களில் 1/4 பங்கினர் தேசிய பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிக்கப்படுவார்கள் எனின், இப்பாடசாலையிலிருந்து எத்தனை மாணவர்கள் தேசிய பாடசாலைக்கு அனுமதிப்பார்கள்?
................................................................



விசேட வினாத்தாள் II - தரம் 05 - 2012 - கல்விமுரசு

# தென்மராட்சி வலய சதுரங்கப் போட்டி முடிவுகள்

(தென்மராட்சி)

தென்மராட்சி வலய சதுரங்கப் போட்டி முடிவுகள் வெள்ளிக்கிழமை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி உள்ளக அரங்கில் நடைபெற்றது.

**15 வயது ஆண்கள்**

முதலாமிடம் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம், இரண்டாமிடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மூன்றாமிடம்- கச்சாய் அ.த.க. பாடசாலை.

**15 வயது பெண்கள்**

முதலாமிடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - கச்சாய் அ.த.க. பாடசாலை, மூன்றாமிடம்- கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்,

**19 வயது ஆண்கள்**

முதலாமிடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மூன்றாமிடம் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

**19 வயது பெண்கள்**

முதலாமிடம் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி, இரண்டாமிடம் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், மூன்றாமிடம்- மீசாலை விக்கினேஸ்வரா வித்தியாலயம். (93)



கிளி - கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி பாடசாலை அதிபர் தி.சிவநாதன் தலைமையில் நடைபெற்றது. இதில் அணிவகுப்பு நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒரு பகுதியினரையும், இடைவேளை நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களின் ஒரு பகுதியினரையும் காணலாம்.

# நட்புத் துடுப்பாட்டப் போட்டிகள் கொக்குவில் இந்து இனிங்ஸ் வெற்றி

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான நட்புத் துடுப்பாட்டம் சுன்னாகம் ஸ்கந்தா மைதானத்தில் இடம்பெற்றது.

நாணயச் சுழற்சியில் ஸ்கந்தா வெற்றி பெற்றபோதும் முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது.

கொக்குவில் இந்துக் கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடியது. 77 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 503 ஓட்டங்கள் பெற்றது.

ராகுலன் - 90 பந்துகளில் 132 ஓட்டங்களையும், பங்குஜன் 124 பந்துகளில் 122 ஓட்டங்களையும், ஆதித்தன் 80 பந்துகளில், 116 ஓட்டங்களையும் பெற்றனர்.

நிசாந்தன் ஆட்டம் இழக்காமல் 15 பந்துகளில் 21 ஓட்டங்கள் எடுத்தார்.

கொக்குவில் இந்து ஆட்டம் பந்து வீச்சில் ஸ்கந்தா அணியைச் சேர்ந்த ஜெனசன் 22 ஓவர்களில் 139 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும், துவாரகன் 13 ஓவர்களில் 58 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும், சயன் 17 ஓவர்களில் 97 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

ஸ்கந்தா அணி தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது. 44 ஓவர் நிறைவில் சகல விக்கெட்டையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது.

டிலக்சன் 60 பந்துகளில் 36 ஓட்டங்களையும், ஜெனோசன் 33 பந்துகளில் 25 ஓட்டங்களையும், சிந்துஜன் 30 பந்துகளில் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.

கொக்குவில் இந்துக் கல்லூரி சார்பாக பந்து வீச்சில் ராகுலன் 11 ஓவர்களில் 37 ஓட்டங்களையும், 5 விக்கெட்டுக்களையும், யனுதாஸ் 10 ஓவர்களில் 16 ஓட்டங்களையும் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

சிலோசன், பவித்திரன், நிசாந்தன் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பலோ ஒன் முறையில் தனது இரண்டாவது இனிங்ஸ் சில் ஸ்கந்தா துடுப்பெடுத்தாடிய 26.2 ஓவர்களில் சகல விக்கெட்டையும் இழந்து 70 ஓட்டங்கள் பெற்றது. றொபேட் 27ஓட்டங்கள் டிலக்சன் 12 ஓட்டங்கள் பெற்றனர்.

ஒரு இனிங்ஸ் 306 ஓட்டங்களால் கொக்குவில் இந்து வெற்றி பெற்றது. (93)

# வடமராட்சி வடக்கில் கழக மெய்வன்மை

(வடமராட்சி)

வடமராட்சி வடக்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.


வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார் கலந்து கொள்ளவுள்ளார். இந்த மெய்வன்மைப் போட்டித் தெரிவுக்குழு நிகழ்வு மார்ச் மாதம் 7ஆம் திகதி காலை 7 மணிக்கு ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (100)

# வடமராட்சி வலய எல்லே போட்டிகள்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை மட்ட எல்லே போட்டிகள் எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு இடம்பெறும்.

பருத்தித்துறை மனோகரா விளையாட்டுக்கழக மைதானத்தில் 19 வயது பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் இடம்பெறும்.

பெண்களுக்கான எல்லே போட்டிகள் காலை 8.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெறும். (93)



யாழ்.சென்.றோக்ஸ் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும்,வெற்றி பெற்ற வீரர் ஒருவருக்கு பிரதம விருந்தினராகக்கலந்துகொண்ட யாழ்.கோட்டக் கல்விப்பணிப்பாளர் திருமதி வசந்திமாலா சிவபாலன் பரிசு வழங்குவதையும் காணலாம். (21)

# யாழ். கோட்ட மட்ட வலைப்பந்தாட்ட முடிவுகள்

யாழ் கோட்ட மட்ட வலைப்பந்தாட்டப்போட்டிகள். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இதில்

**15 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி - யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**17 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, இரண்டாமிடம் - சுண்டுக்குழி மகளிர் கல்லூரி - யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**19 வயதுப் பிரிவு**

முதலாமிடம் - யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடம். இரண்டாமிடம் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மூன்றாமிடம் - சென். ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம். (93)

# இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். உடுப்பிட்டி அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் நா.மகேந்திரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஈபிடிபி யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், சிறப்பு விருந்தினராக கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே. பாலசுப்பிரமணியம், ஈ.பி.டி.பியின் கோப்பாய் பிரதேச அமைப்பாளரும் கோப்பாய் பிரதேசசபை எதிர்க் கட்சித் தலைவருமான இ.ஜங்கரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (135)

# ஆசிய கிண்ண கிரிக்கெட்; இலங்கை அணி வீரர்கள் பட்டியல்

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டிக்கான இலங்கை அணி வீரர்களின் விபரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் சுழற்பந்து வீச்சாளர் ஹேரத் நீக்கப்பட்டுள்ளார்.

இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டி வருகிற 11ஆம் திகதி முதல் 22ஆம் திகதி வரை வங்கதேசத்தில் நடைபெற உள்ளது. இந்தப் போட்டித் தொடருக்கான இந்திய அணி வீரர்கள் விபரம் ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது. தற்போது இலங்கை அணி வீரர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அவுஸ்ரேலியாவில் நடைபெற்று வரும் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில் இடம் பெற்று உள்ள சுழற்பந்து வீச்சாளர் ரங்கனா ஹேரத் நீக்கப்பட்டுள்ளார். இதேபோல தமிகாபிரசாத், வெலுகேந்திரா ஆகியோரும் நீக்கப்பட்டுள்ளனர். பதிலாக சுழற்பந்து வீச்சாளர் பிரசன்னா, வேகப்பந்து வீச்சாளர் சுரங்கா லக்மல் ஆகியோர் அணியில் தெரிவு பெற்றுள்ளனர்.

ஆசிய கோப்பை போட்டிக்கான 14 பேர் கொண்ட இலங்கை அணி விபரம்:

ஜெயவர்த்தனே(அணித்தலைவர்), மேத்யூஸ் (துணை அணித் தலைவர்)), திலகரத்னே திலசன், குமாரா சங்கரா, சண்டிமால், திரிமனே, பெரெரா, மெகரூப், செனயாகவே, நுவான் குலசேகரா, உபுல்தரங்கா, லஸித் மலிங்கா, பிரசன்னா, சுரங்கா லக்மல்.

# கபடிப்போட்டி

வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலை மட்ட கபடிப் போட்டிகள் ஆண், பெண் இரு பாலாருக்கும் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 8.30 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

# முஸ்லிம் கால்பந்தாட்ட வீராங்கனைகளுக்கு சிறப்பு ஹிஜாப் அங்கிகள்

கால்பந்தாட்டப் போட்டிகளின் போது முஸ்லிம் வீராங்கனைகள் அணிந்து விளையாடுவதற்கு சிறப்பு ஹிஜாப் அங்கிகளை தயார் செய்துள்ள ஃபீ்பா, அதை பரீட்சித்துப் பார்ப்பதற்குத் தீர்மானித்துள்ளது.

ஹிஜாப் எனும் முக்காடு அணிவதைத் தடைசெய்யும் விளையாட்டு விதியின் மூலம் முஸ்லிம் வீராங்கனைகளுக்கு பாரபட்சம் காட்டப்படுகின்றது என்று செயற்பாட்டாளர்கள் வாதிட்டு வருகின்றனர். தலையை மறைக்கும் முக்காடுகளை அணிந்து கொண்டு பெண்கள் விளையாடும் போது, எதிரணியினர் அவர்களை இழுத்துத் தள்ளிவிடும் வாய்ப்புகள் இருப்பதால் இலகுவில் காயமடையும் ஆபத்து இருப்பதாகக் கூறி ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஃபீபா (உலக கால்பந்தாட்ட நிர்வாக நிறுவனம்) இந்தத் தடையைக் கொண்டு வந்தது.



இப்போது, விளையாட்டுக்களின் போது பாதுகாப்பாக அணியக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ள புதிய வகைத் தலை அங்கிகளை அனுமதிக்கலாமா என்று ஃபீபா ஆராய்ந்து வருகின்றது. இந்தப் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கு முன்னதாக, புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள சிறப்பு ஹிஜாப் அங்கிகளைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு ஃபீபா தீர்மானித்துள்ளது.

# கூடங்குளம் அணுஉலை விவகாரம்
# வெடித்தது பெரும் கலவரம்




(ராஜபாளையம்)

கூடங்குளம் அணு மின் நிலைய எதிர்ப்புப் போராட்டக் குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் பங்கேற்பதாக இருந்த கூட்டத்தில் கலவரம் வெடித்தது. கூடங்குளம் அணுமின் நிலையம் திறக்க எதிர்ப்பு தெரிவித்து, நாம் தமிழர் இயக்கம் சார்பில் விருது நகர் மாவட்டம் ராஜ பாளையம் ஜவஹர் மைதானத்தில் நேற்று முன்தினம் மாலை கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கூடங்குளம் அணு உலை எதிர்ப்புப் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் பங்கேற்க உள்ளதாகவும் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது. கூட்டம துவங்கியது. அப்போது, ராஜபாளையம் நகர காங்கிரஸ் தலைவர் பீமராஜா, மாவட்ட செயலாளர் சம்சுதீன், இளைஞர் காங்கிரஸ் தொகுதி அமைப் பாளர் சங்கர் கணேஷ், தமிழ் நாடு அணு விழிப்புணர்வு இயக்க அமைப்பாளர் ஸ்ரீதர், பாஜ மாவட்ட செயலாளர் ராதா கிருஷ்ணன், அமைப்பாளர் சுகந்தம் ராம கிருஷ்ணன் உள்பட 200 இக்கும் மேற்பட்டோர் திரண்டு சங்கரன் கோவில் முகசு பகுதியில் இருந்து பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்த ஜவஹர் மைதானத்தை நோக்கி சென்றனர்.

அவர்களை பொலிசார் தடுத்து நிறுத்தினர்.

காங்கிரஸ் கனவு!




# சூடுபிடிக்கிறது தேர்தல் பிரசாரம்
# 32 அமைச்சர்கள் வாக்கு வேட்டையில்



(சங்கரன்கோவில்)

சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் அதிமுக, திமுக, மதிமுக, தேமுதிக, பாஜ, சமாஜ்வாடி கட்சி வேட்பாளர்கள் உட்பட 13 பேர் போட்டியிடுகின்றனர். பிரதான கட்சிகள் அனைத்தும் தேர்தல் பணியில் மும்முரமாக இறங்கிவிட்டன. தி.மு.கவை பொறுத்தவரை கடந்த 1ஆம் தேதி தேர்தல் பணிக்குழுக்கள் அறிவிக்கப்பட்டன. தொடர்ந்து தென் மண்டல அமைப்புச் செயலாளரும், மத்திய அமைச்சருமான மு.க. அழகிரி நேற்று கட்சியின் முன்னணியினருடன் தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை நடத்தினார். கூட்டணிக் கட்சிகளான காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளின் நிர்வாகிகளிடம் அவர்களது பங்களிப்பு மற்றும் பிரசாரம் குறித்து ஆலோசித்தார்.

32 அமைச்சர்கள் கொண்ட 43 பேரை அ.தி.மு.க களம் இறக்கியுள்ள நிலையில், திமுகவும் முன்னாள் அமைச்சர்கள், தற்போதைய எம்.எல்.ஏக்கள் மற்றும் மாநில நிர்வாகிகளை தேர்தல் பணிக்குழுவில் இடம்பெறச் செய்துள்ளது. அவர்களின் தேர்தல் பணிகளை முடுக்கிவிடவும், கண்காணிக்கவும் மு.க. அழகிரி சங்கரன்கோவில் தொகுதியில் 15 நாட்கள் முகாமிட திட்டமிட்டுள்ளார். இதற்காக வாசுதேவநல்லூரில் உள்ள தி.மு.க பிரமுகர் ஒருவரது தோட்டத்தில் அவர் தங்கி உள்ளார். நாள் தோறும் தேர்தல் பணிக்குழுவினருக்கு ஒதுககப்பட்டுள்ள பகுதிகளில் அவர்கள் எப்படி பணியாற்றுவது, வாக்காளர்களை எப்படிக் கவர்வது என்பது குறித்து ஆலோசனைகளும் வழங்குகிறார்.


# சங்கரன்கோவில் இடைத் தேர்தல்
# அ.தி.மு.க.வியூகம் அமைக்கிறது

(சங்கரன்கோவில்)

சங்கரன்கோவில் இடைத்தேர்தலில் ஆதி திராவிடர்கள் ஓட்டுகளை பெற அ.தி.மு.க புதுத் திட்டம் அமைத்துள்ளது. சங்கரன் கோவில் தொகுதியில் மொத்தம் 45 ஆயிரம் ஆதிதிராவிடர்களின் வாக்கு உள்ளன. இவர்களின் அப்படியே தங்களுக்கு சாதகமாக்கி கொள்ள அதிமுக புதுத் திட்டம் அமைத்துள்ளது. தொகுதியில் உள்ள 32 அமைச்சர்கள் கூடி கைத்தறிதுறை அமைச்சர் சுந்தர்ராஜன் தலைமையில் 9 பேர் கொண்ட குழுவை அமைத்துள்ளனர்.

அதில், அமைச்சர் சுந்தர்ராஜன், முன்னாள் எம்.பி முருகேசன். வாசுதேவ நல்லூர் எம்.எல்.ஏ துரையப்பா, மாவட்ட ஜெ. பேரவை துணை செயலாளர் ஸ்ரீவைகுண்டம் சின்னதுரை, மாவட்ட பொருளாளர் சண்முகசுந்தரம், தூத்துக்குடி மாவட்ட பஞ்சாயத்து தலைவர் சின்னதுரை, ஒன்றிய கவுன்சிலர் வனராஜ், சாத்தூர் யூனியன் தலைவர் வேலாயுதம், முன்னாள் எம்.எல்.ஏ கோபாலகிருஷ்ணன் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் தவிர மறைந்த அமைச்சர் கருப்பசாமியின் தம்பி எஸ்.கே. கருப்பசாமி, மகன் மாரிச்சாமி ஆகியோரும் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் தொகுதியில் முகாமிட்டு வாக்கு சேகரிப்பில் ஈடுபட உள்ளனர்.

# மேற்கு வங்கத்தில் பிரமாண்ட பேரணி
# கம்யூனிஸ்ட்களுக்குப் பேரிடி



(கொல்கத்தா)


மேற்கு வங்கத்தில் எதிர்க்கட்சயான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்டுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் முதல்வர் மம்தா பானர்ஜி பிரமாண்ட பேரணி நடத்தினார். மேற்கு வங்க மாநிலம் பர்தவான் நகரில் கடந்த 23ஆம் திகதி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய ஊர்வலத்தில் ஏற்பட்ட வன்முறையில் முன்னாள் எம்.எல்.ஏ பிரதீப் ஷா மற்றும் கட்சியின் மாவட்ட கமிட்டி உறுப்பினர் கமல் கயன் ஆகிய 2 பேர் கொல்லப் பட்டனர். திரிணா முல் காங்கிரஸ் கட்சியினர் தான் தாக்குதல் நடத்தி இருவரையும் கொன்று விட்டதாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் குற்றம் சாட்டினர். இது குறித்து சி.ஐ.டி பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தங்கள் கட்சித் தலைவர்கள் கொல்லபபட்டதைக் கண்டித்து முன்னாள் முதல்வர் புத்ததேவ் பட்டாச்சார்யா தலைமையில் மார்க சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர் கொல்கத்தாவில் கடந்த 29ஆம் திகதி பிரமாண்ட பேரணி நடத்தினர். அப்போது திரிணாமுல் காங்கிரசுக்கு எதிராக கோஷமிட்டபடி சென்றனர். இந்த நிலையில், மார்க்சிஸ்ட் கட்சிக்கு பதிலடி கொடுக்கும் விதமாக முதல்வர் மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் கொல்கத்தா நகரில் பிரமாண்ட பேரணி நடத்தினார்.

இந்தியச் செய்திகள்

அமைச்சர்கள், தொண்டர்கள் புடைசூழ திறந்த ஜீப்பில் மம்தா சென்றார். அரசு பற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அவதூறு பிரசாரம் செய்வதைக் கண்டித்து பேரணி நடத்துவதாக திரிணாமுல் கட்சியினர் கூறினர். 5 கிலோ மீட்டர் தூரத்துக்கு நடந்த இந்த பேரணியால் நகரில் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

# முல்லைப்பெரியாறு விவகாரம்
# முரண்டு பிடிக்கிறது கேரளா



முல்லைப் பெரியாறு விவகாரத்தில் ஆரம்பத்தில் இருந்தே தமிழகத்துக்கும் உச்ச நீதிமன்றத்துக்கும், நீதிபதி ஆனந்த் குழுவுக்கும் ஒத்துழைப்புத் தராமல் பிரச்சினை நீடித்துக் கொண்டே வருவது கேரளா அரசு தான். ஆய்வு அறிககை சமர்ப்பிக்க உள்ள கட்டத்தில் இப்படி இருப்பது அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளிப்பதாக பெரியாறு பாசன விவசாயிகளும், பொதுப் பணித்துறை மூத்த பொறியியலாளர்களும் தெரிவித்துள்ளனர். அணையின பலம் குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க உச்ச நீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட நீதிபதி ஆனந்த் தலைமையிலான 5 பேர் குழு இதுவரையில் பல்வேறு ஆய்வுகளை நடத்தி முடித்துவிட்டது. அணையில் துளையிட்டு நடத்தப்படும் ஆய்வின் அறிக்கையை மட்டும் எதிர்பார்த்துக் காத்திருக்கிறது. இதைப் பெற்றதும் தங்களிடம் உள்ள ஆய்வுகளின் அடிப்படையில் இறுதி அறிக்கையைத் தயாரித்து ஏப்ரல் 30ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் சமர்ப்பித்துவிடும் இநத சூழ்நிலையில், ஆனந்த் குழுவுக்கு தமிழகமும் கேரளமும் ஒத்துழைப்புத் தரவில்லை என்று உச்ச நீதிமன்றத்திடம் குழு தெரிவித்ததும், உச்ச நீதிமன்றம், குழுவின் ஆய்வுக்கு இரு மாநில அரசுகளும் முழு ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது.

அணை பலமாக உள்ளது என்ற மத்திய நீர்வள ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று அணையின் நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்த கடந்த 2006ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை நிராகரிக்கும் வகையில் அணைகள் பாதுகாப்புச் சட்டத்தை கேரள அரசு சட்டப்பேரவையில் நிறைவேற்றியது. கேரளாவை தவிர எந்த அரசுக்கும் எந்த அமைப்புக்கும் அணையின் நீர்மட்டத்தை உயர்த்த அதிகாரம் இல்லை என்று கேரளா வாதிட்டது. இதனால் கடந்த 2010இல் நீதிபதி ஆனந்த் தலைமையில் குழுவை உச்ச நீதிமன்றம் அமைத்து அணையின் பலம் குறித்து ஆய்வு நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கக் கேட்டுக் கொண்டது.



தவக்காலச் சிந்தனை

# வாழ்வை வளமாக்கும் காலம்

இந்தத் தவக்காலம்அன்பின் அருளின் காலம். இறைவனின் அன்பையும் அவரின் அளவற்ற அருளின் இனிமையையும் உணரும் அற்புதமான காலம்.

இந்தக் காலத்தின் அவசியத்தையும், தேவையையும் நன்குணர்ந்து அதன் ஒளியிலே பயணிப்பது நம் ஒவ்வொருவரின் கடமையாகும்.

அன்று நினிவே நகர மக்கள் வாழ்வைப் புதுப்பிக்கும் நோக்கில் கோணி உடுத்தி, சாம்பலில் உட்கார்ந்து நினிவே இறைவாக்கினரின் அருள் மொழிகளை உள்வாங்கி வாழ்வை மாற்றிக்கொண்டார்கள்.

இந்த நிலையில் நாமும் உணர்ந்து மனமாற்றம் அடைந்து இயேசுவின் தெய்வீகததை நமது வாழ்வுத் தடயங்களினூடாக உருவாக்கவேண்டியது நமது கடமையும் அழைப்புமாகும். இந்தக் காலம் எம்மனங்களில் இறையுணர்வைத் தட்டியழும்பும் ஒரு புனித காலம்.

இயேசுவின் பாடுகளையும், மரணத்தையும் உணர்வுபூர்வமானதாக்கி எம் அகவாழ்வை ஏற்றம் பெறச் செய்யவேண்டியதும் வாழ்வுக்கு புதிய அர்த்தத் கைகொடுப்பதும் அவசியமாகக் கருதப்படுகின்றது. காலத்தின் தேவைக்கு ஏற்ப மொய்மையிலிருந்து மெய்மைக்கு இருளிலிருந்து: ஒளிக்கும், சாவிலிருந்து வாழ்வுக்கும் எம்மை தக்க முறைமில் தயார் செய்து நற்செயல்களால் வாழ்வை அழகுபடுத்த வேண்டும். சமூகச் சீரழிவுகளும் கலாசாரசங்களும் எமது தெய்வீகம் நிறைந்த புனித வாழ்வுக்கு சவாலாக அமைகின்றன. எனவே ஏற்புடைய தகுந்த காலமாகிய இந்தக் காலத்தில் எமது வாழ்வை வளமாக்கக்கூடிய கடப்பாடு எமக்கு உண்டு என்பதை நாம் உணர்ந்திடுவோம்.

அருட்தந்தை மா.றேஜிஸ் இராசநாயகம்

# ஈரான் மீது போர் தொடுப்போம் எச்சரிக்கிறது அமெரிக்கா



(வொஷிங்டன்)

ஈரான், அணு ஆயுதங்கள் குவிப்பதை நிறுத்தாவிட்டால், கடைசி அஸ்திரமாக அதன் மீது போர் தொடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உலக அமைதிக்கு குந்தகம் ஏற்படுத்தும் வகையில் ஈரான் தொடர்ந்து அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாக அமெரிக்கா, ஐரோப்பா குற்றம் சாட்டி வருகின்றன. இதை ஈரான் பொருட்படுத்தவில்லை. இதையடுத்து, ஈரான் மீது பொருளாதாரத்தடை விதித்ததுடன், உலக நாடுகள் ஈரானுடன் வர்த்தகத்தொடர்பு வைக்கக் கூடாது என்று அமெரிக்கா வலியுறுத்தியது. இந்நிலையில், வொஷிங்டனில் இருந்து வெளியாகும் தி அட்லாண்டிக் பத்திரிகைக்கு அமெரிக்க அதிபர் ஒபாமா அளித்துள்ள பேட்டியில் ஈரான் அணுஆயுதம் குவிப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நடவடிக்கையை அந்நாடு கைவிட வேண்டும். பொருளாதாரத் தடை, தூதரக நடவடிக்கை போன்றவற்றின் மூலம் ஈரானை நிர்ப்பந்திப்போம். ஆனாலும், வேறு எல்லா வாய்ப்புகளும் உள்ளன. ஈரானின் அணு ஆயுதங்களை அழிக்க, கடைசி அஸ்திரமாக போர் புரியவும் வாய்ப்பு உள்ளது. இதை ஈரான் புரிந்து கொள்ள வேண்டும். அதே போல், ஈரான் மீது போர் தொடுக்க இஸ்ரேல் அவசரப்படக் கூடாது என எச்சரித்து வருகிறோம். அப்படி இஸ்ரேல் அவசரமாக தாக்குதல் நடத்தினால், அது ஈரானுக்கு அனுதாபம் தேடி வந்து விடக் கூடும். இவ்வாறு ஒபாமா கூறியுள்ளார்.

# இஸ்ரேல் நடத்துவது இலட்சியப் போராட்டம்



## பிரதமர் எச்சரிக்கை

இஸ்ரேலின் பிரதமரான பெஞ்சமீன் நெதான்யாகு பன்னாட்டுத் தலைவர்களுடன் கலந்து விவாதித்து ஈரான் பிரச்சினைக்கு ஒரு தீர்வைத் தேடிக்கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகியுள்ளன.

இது குறித்து விவாதிப்பதற்காக கனடா சென்ற இஸ்ரேல் பிரதமர் ஒட்டாவாவில் கனடா பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பெரைச் சந்தித்துப் பேசினார்.


பின்பு நடந்த பத்திரிகையாளர் சந்திப்பின் போது, இஸ்ரேல் நடத்துவது இலட்சியப் போராட்டம் என்றும் ஈரானின் தந்திரமான பேச்சு வலையில் உலகநாடுகள் சிக்கிக்கொள்ளக்கூடாது என்றும் நெதான்யாகு தெரிவித்தார்.

இது குறித்து இஸ்ரேலின் இடைக்காலத் தலைவரான பாப் கூறுகையில், ஈரான் விடயத்தில் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு அமைதியை நிலை நாட்ட கனடாவின் அறிவுரையும், அனுபவமும் தேவைப் படுவதாக் கூறினார்.

உலகச் செய்திகள்

இதையடுத்து இன்று அமெரிக்கா செல்லும் நெதான்யாகு அமெரிக்க ஜனாதிபதி பாரக் ஒபாமாவுடன் இணைந்து இரு நாட்டு பொது நடவடிக்கைகள் குழுவின் கொள்கைகள் விளக்கக்கூட்டத்தில் உரையாற்ற உள்ளார். அங்கும் ஈரான் பிரச்சினை குறித்தும் பேசப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

# சமிபாடடையாத 30கிலோ பிளாஸ்ரிக்



உலகில் பிளாஸ்ரிக் கழிவுகளின் கோர முடிவுகளுக்கு இந்தோனேசியாவில் ஒரு எடுத்துக் காட்டு, இடம்பெற்றுள்ளது நாட்டின் மிகப்பெரிய வனவிலங்குப் பூங்கா, தலைநகர் ஜகார்தாவில் உள்ளது. அங்கு இருந்த 30 வயது ஒட்டகச் சிவிங்கி கடந்த முதலாம் திகதி திடீரென இறந்தது. அதன் மரணத்துக்கான காரணம் அறிய பிரேத பரிசோதனை நடத்தப்பட்டது. அதில் டாக்டர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர். ஒட்டகச் சிவிங்கியின் வயிற்றில் பெரிய பந்து போல 20 கிலோ எடையுள்ள பிளாஸ்ரிக் இருந்ததுதான் காரணம். பூங்காவில் பார்வையாளர்கள் சாப்பிட்டு விட்டு வீசிய பிளாஸ்ரிக் தண்ணீர்ப் போத்தல், சிகரெட்பெட்டிகள் ஆகியவற்றை நீண்ட நாட்களாக ஒட்டகச் சிவிங்கி சாப்பிட்டு வந்ததும், அவை சமிபாடு அடையாமல் ஒட்டகச் சிவிங்கியின் மரணத்துக்குக் காரணமானதும் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அமெரிக்க சூறாவளிக்கு பலியானோர் தொகை 30



(நியூயோர்க்)

அமெரிக்காவில் சூறாவளியின் கோரத் தாண்டவத்துக்கு 30 பேர் பலியாகியுள்ளனர். அதிகபட்சமாக இண்டியானா மாநிலத்தில் 13 பேர் இறந்துள்ளனர். இதுபற்றி மாநில கவர்னர் மிட்ச் டேனியல் கூறுகையில், இயற்கை அன்னையில் இதுபோன்ற கோபத்தை இதுவரை பார்க்கவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்த்து மனம் கலங்கினேன் என்றார். கடந்த ஆண்டில் நடந்த பல்வேறு புயல், சூறாவளிக்கு அமெரிக்காவில் 550 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது.

# மெக்ஸிகோ வளைகுடா பெற்ரோலிய கசிவு நஷ்ட ஈடு வழங்க உடன்பாடு



மெக்ஸிகோ வளைகுடாவில் ஏற்பட்ட பெறரோலியக் கசிவினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்ட ஈடாக 7.8 பில்லியன் டொலர்கள் வழங்கும் ஒரு உடன்பாட்டை மேற்கொண்டுள்ளதாகப் பெற்ரோலிய நிறுவனம் கூறியுள்ளது.

மெக்ஸிகோ வளைகுடாவில் இரு வருடங்களுக்கு முன்பு, ஆழ்கடல் துளையிடும் கருவி வெடித்ததில் பல இலட்சக்கணக்கான பீப்பாய்கள் கசிந்ததுடன், 11 பணியாளர்களும் இறந்தனர்.

இந்தப்பெற்ரோலிய க்சிவினால் பாதிக்கப்பட்ட தனி நபர்கள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு நஷ்ட ஈடாக 7.8 பில்லியன் டொலர்கள் வழங்குவதற்கான ஒரு உடன்பாட்டை எட்டியிருப்பதாக பெரிய பெற்றோலிய நிறுவனம் கூறியுள்ளது.

இந்த அழிவு காரணமாக தமது தொழிலை இழந்த மீனவர்களே அதிகமான நஷ்ட ஈட்டைப் பெற்றிருக்கிறார்கள். ஆனால் நஷ்ட ஈடு வழங்குவதன் மூலமாக, குற்றத்தை ஒப்புக்கொண்டதாக பொருள்படாது என்றும் கூறியுள்ளது.

அமெரிக்க அரசிடம் இருந்தும், பங்குதாரர்களிடம் இருந்து அந்த நிறுவனம் இன்னமும் வழக்கை எதிர்கொள்கிறது குறிப்பிடத்தக்கது.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

யாழ். நகரில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வரவேற்பாளராகக் கடமையாற்ற கணினி அறிவுடைய ஆங்கில மொழிப் புலமையுள்ள பெண் பிள்ளை தேவை. ஆர்வமுடையவர்கள் 0757881528 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மூன்று பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு தங்கி நின்று வேலை செய்யக்கூடிய பெண்தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0786722147, 0778175058 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வெளிநாடுகளுக்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனம் ஒன்றிக்கு மேற்பார்வையாளர் (ஆண்) காசாளர், உத்தியோகத்தர் தேவை. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையை உறவினர்கள் இருவரது பெயர் விபரங்களுடன் Advertier, 42 srimath Bandaranayake Mawatha. col-12 அல்லது Food exp42@yahoo.com

சுவர்ணமஹால் நிதிச்சேவை நிறுவனத்தில் வாடிக்கையாளர் சேவை உதவியாளர் (ஆண்) யாழ்ப்பாணம், வவுனியா கிளைகளில் பணி வடக்கு கிழக்கு மாகாணங்களில் அடகு சேவை உதவிப்பயிலுனர் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் உறவினர் அல்லாத இருவரின் சிபாரிசுடன் எதிர்வரும் 9 நாட்களுக்குள் Head of Hr& Administration, swarnamahal Financial service, No 654, Galle Rood col-03 அல்லது hr.manager @sfs.lk.

யாழ். நகரில் வீதிகளைப் புனரமைக்கும் கம்பனி ஒன்றுக்கு sife engineer, Technical officer lab technician தேவை ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் வி.வி. கருணாரத்ன & கம்பனி 12A கோவில் வீதி ஒங்கை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும் மேலதிக விபரங்களுக்கு 071 1712003, 0779344786 இற்கு தொடர்பு கொள்ளவும்.

வவுனியா கூமாங்குளத்தில் அமைந்துள்ள சாயி சிறுவர் இல்லத்தின் ஆண்கள் பகுதிக்கு காப்பாளர் தேவை. 40 -68 வயதிற்கு உட்பட்ட நல்லொழுக்கம் உள்ளவர்கள் தங்கியிருந்து கடமையாற்ற ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 12.03.2012 இற்கு முன்னர் விண்ணப்பத்தினை President, Bhagavan sri sathya sai sewa centre, Vavuniya என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும் கடிதத்தின் மேல் மூலையில் பதவியைக் குறித்து அனுப்பவும் மேலதிக விபரங்களுக்கு 0242222492 இற்கு தொடர்பு கொள்ளவும்.

நிறுவனத்தில் சுத்திகரிப்பு வேலை செய்வதற்கு பெண் தொழிலாளி உடன் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 37/1 கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும் மேலதிக தகவல்களுக்கு 0776722055, 0212229516 இற்கு தொடர்பு கொள்ளவும்.

மானிப்பாயில் உள்ள வீடொன்றில் பணியாற்ற பணிப்பெண் தேவை. ஆர்வமுள்ளவர்கள் 0770367125, 0716962869 இற்கு தொடர்பு கொள்ளவும்.

sun Food Products இன் தயாரிப்புக்களை யாழ்ப்பாணத்தில் சந்தைப்படுத்துவதற்கு விற்பனை முவர் விற்பனைப்பிரதி நிதி தேவை ஆர்வமுள்ளவர்கள் 0773565607 இற்கு தொடர்பு கொள்ளவும்.

பூநகரிப் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பொதுமுகாமையாளர் கணக்காளர் கூட்டுறவுப்பணியாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்கள் தேவை. ஆற்றலும் ஆர்வமும் உள்ளவர்கள் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை தலைவர், பூநகரி ப.நோ.கூ. சங்கம் வாடியடி, பூநகரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மருந்தகத்திற்கு விற்பனையாளர் தேவை. கணினி அறிவு மேலதிக தகமைகளாகக் கொள்ளப்படும் ஆர்வமுள்ளவர்கள்- மயூரா மருந்தகம், பலாலி வீதி, திருநெல்வேலி, 021 222 2946 இற்கு தொடர்பு கொள்ளவும்.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் தொழில் நுட்பம் தொடர்பான விடயங்களை தமிழில் மொழி பெயர்ப்பதற்கு மொழிபெயர்ப்பாளர் தேவை. மேலதிக விபரங்களுக்கு 0778688517 அல்லது filetolee@yahoo.com இற்கு தொடர்புகெள்ளவும்.

USA நிறுவனத்தின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள கிளைகளில் பணியாற்ற 30 பேர் தேவை. பயிற்சியின் பின் பணிக்கு அமர்த்தப்படுவர். ஆங்கிலம் கட்டாயம் இல்லை. ஆர்வமுள்ளவர்கள் 0772310564, 0773001962 இற்கு தொடர்புகொள்ளவும்.

பேக்கரி வேலை, மற்றும் சிற்றுண்டிகள் தயாரிப்பாளர் உடனடியாகத் தேவை. தங்குமிடம், உணவு வசதியுண்டு. ஆர்வமுள்ளவர்கள் 0772990990 இற்கு தொடர்பு கொள்ளவும்.

Maxwell Marketing Company க்கு கொழும்பு உட்பட நாடு பூராகவும் Manager/ administration officers/ Bpo's/ marketing Executives தேவை. ஆர்வமுள்ளவர்கள் 077 3050555 இற்கு தொடர்புகொள்ளவும்.

ஊடகவியல் நிறுவனம் ஒன்றுக்கு புகைப்படம் எடுக்கக் கூடிய, கணினித்தட்டச்சு செய்யக்கூடிய தமிழில் ஒப்புநோக்கக் கூடிய ஊடகவியலாளர்கள் தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பங்களை P.o.Box716, கொழும்பு அல்லது prasad@tradlanka.net இற்கு அனுப்பி வைக்கவும்.

கொழும்பு 12இல் உள்ள ஸ்ரூடியோ ஒன்றிற்கு Video Editior Graphic Desingner தேவை. ஆர்வமுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆர்வமுள்ளவர்கள் 077 3601706 இற்கு தொடர்பு கொள்ளவும்.

# ஊழலும் வீண்விரயமும் தாராளம்; அரசின் போக்கு குறித்து ரணில் கண்டனம்

(கொழும்பு)

இன்றைய அரசில் ஊழலும் வீண்விரயமும் தாராளமாக இடம்பெற்று வருகின்றன என்றும் அரசாங்கத்தின் ஊழல் மற்றும் வீண்விரயம் என்பனவற்றுக்கு இரண்டு உதாரணங்களே போதுமெனவும் அவற்றில் நுரைச்சோலை அனல்மின்சார திட்டம் ஊழலுக்கும் ஓயாமடுவையில் நடைபெற்ற தேசத்திற்கு மகுடம் கண்காட்சி வீண்விரயத்திற்கும் சிறந்த உதாரணங்களென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகத்தினை புனருத்தாபனம் செய்வதற்காக நிதி சேகரிக்கும் நிகழ்வு புத்தளத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.



எரிபொருட்களுக்கான விலை உயர்வுக்கு உலக நாடுகளின் விலை ஏற்றம் காரணமில்லையெனவும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளே காரணமெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்வில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, புத்தளம் பிரதேச மாகாணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## செயலமர்வு

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள சங்கானை சண்டிலிப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர்கள், வழிகாட்டல் ஆலோசனை அதிபர்களுக்கான பாதுகாப்பாக இருப்போம் என்னும் விடயம் பற்றிய செயலமர்வு ஒன்று எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

மானிப்பாயில் அமைந்துள்ள ஆசிரிய வள நிலையத்தில் அன்றையதினம் காலை 9 மணிமுதல் பிற்பகல் 1மணி வரை நடைபெறவுள்ளதுடன் இச் செயலமர்வை கனேடிய செஞ்சிலுவைச் சங்கமும், இலங்கை கல்வி அமைச்சும் இணைந்து நாடு முழுவதும் உள்ள பாடசாலை அதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் நடத்திவருவதாக வலிகாம வலயக்கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (06)

## தெய்வீக கானங்கள் இறுவட்டு வெளியீடு

கவிவேந்தர் பொன்.சுகந்தன் எழுதிய தென்னிந்திய முன்னணிப் பாடகர்களாலும் இசைக் கலைஞர்களாலும் உருவாக்கப்பட்ட தெய்வீககானங்கள் இறு வட்டின் வெளியீட் டுவிழா நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்கு மாத்தளை ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி தேவஸ்தான அறங்காவலர் சபைத்தலைவர் எஸ்.சந்திரசேகரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இலங்கையின் பிரபல சுழல் பந்துவீச்சாளர் முரளிதரனின் தந்தையார் தொழிலதிபர் முத்தையா பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (10)

# அழைப்பிதழ்கள் வடிவமைப்பு மக்கள் மனம் கவர்ந்த கண்காட்சி

(கொக்குவில்)

வட மாகாண கலாச்சார திணைக்களத்தினால் அழைப்பிதழ்களை எவ்வாறு சிறப்பாக வடிவமைப்பது என்ற தொனிப்பொருளில் கண்காட்சியொன்று கொக்குவில் இந்துக்கல்லூரி சுப்பிரமணியம் மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. இக்கண்காட்சியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இரண்டு நாட்கள் இடம்பெற்ற இக்கண்காட்சியில் இதுவரைகாலமும் கலாச்சார திணைக்களத்தினால் வடிவமைக்கப்பட்ட அழைப்பிதழ்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் அவற்றை எவ்வாறு சிறப்பாக வடிவமைப்பது மற்றும் அவற்றின் ஆவணப்படுத்தல் என்பன தொடர்பாக விளக்கங்களும் அளிக்கப்பட்டன. இக்கண்காட்சியானது சித்திரமும் வடிவமைப்பும் பயிலும் மாணவர்களுக்கும் ஆசியர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்திருந்தன.

வடமாகாண ஆளுநர் தனது உரையின் போது, 2009 மே மாதத்திற்கு பின்னர் நடைபெற்ற அனைத்து நிகழ்வுகளினிதும் சகல விடயங்களையும் ஆவணப்படுத்தி வைக்குமாறு கேட்டுக் கொண்டார்.



இக்கண்காட்சியை வடமாகாண பிரதம செயலாளர் திருமதி. விஜயலட்சுமி ரமேஸ், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன், பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் இ.உமாகாந்தன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் பி. விக்னேஸ்வரன், ஏனைய வடமாகாண சபையின் உயர் அதிகாரிகள், சித்திரமும் வடிவமைப்பும் துறையைச் சார்ந்த ஆசிரிய ஆலோசகர்கள், ஆசிரியர்கள்., மாணவர்கள் மற்றும் பலர் பார்வையிட்டனர்.



மன்னார், அடம்பன் தாமரைக்குளத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வேளாங்கண்ணி மாதா ஆலயத்தை, மன்னார் மறை மாவட்ட ஆயர் அதிமேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகை மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் இணைந்து திறந்து வைக்கப்பட்டது. இந்த ஆலயமே முதன்முதல் இந்தக் கிராமத்தில் அமைக்கப்பட்ட முதலாவது ஆலயமாகும். (21)

## விபரம் கோரல்

(வலிகாமம்)

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்குரிய மதிய உணவு தயாரிக்கும் சமையல் தொண்டர்களின் விபரங்களை வடமாகாண கல்விப்பணிப்பாளர் கோரியுள்ளார்.

இத் தொண்டர்களின் விபரங்களை வலயக்கல்விப் பணிமனையினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. படிவத்தைப் பூர்த்தி செய்து நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் கோட்டக் கல்விப் பணிப்பாளர்களிடம் ஒப்படைக்கும்படி வலயக்கல்விப் பணிப்பாளரினால் அறிவிக்கப் பட்டுள்ளது. (06)

# ராசி பலன் மார்ச் 1-15 வரை..

கணிப்பவர் பெருங்குளம் ராமகிருஷ்ணன MCA,MA(Ast)

### மகரம்:

(உத்திராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2) அடுத்தவரின் உணர்வுகளையும் உணரும் மகர ராசி வாசகர்களே இரண்டாமிடத்தில் சூரியன், மூன்றில் புதன், நான்காமிடத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், ஐந்தாமிடத்தில் கேது, எட்டாமிடத்தில் செவ்வாய், பத்தாமிடத்தில் ராசிநாதன் சனி, லாபஸ்தானத்தில் ராகு என கிரகங்கள் வீற்றிருக்கிறார்கள். 12ஆம் திகதி புதன் கும்பத்திற்கும், 14ஆம் திகதி அஷ்டமாதிபதி சூரியன் மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

மூன்றுக்கும் ஐந்துக்கும் ஏழுக்கும் உடையவர்கள் நான்கில் அமர ராசியாதிபதி பத்தில் இருக்க உங்கள் தேவைகள் அனைத்தும் நிறைவேறும். குடும்பஸ்தானத்தில் அஷ்டமாதிபதி சூர்யன் அமர அவரை செவ்வாய் பார்ப்பது சரியல்ல. குடும்பத்தில் சின்ன சின்ன குழப்பங்கள் வந்து வந்து மறையும். எனினும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. குரு சந்திர யோகத்தால் பாராட்டும் புகழும் கிடைக்கும். பிள்ளைகளின் மீது தனி கவனம் தேவை. சிலருக்கு பிள்ளைகளுடன் கருத்து மோதல்கள் வரலாம்.

வாகன வசதிகள் பெருகும். தாய்க்காக எந்த தியாகத்தையும் செய்து அதற்கான அங்கீகாரத்தை பெறுவீர்கள். மூன்றில் இருக்கும் புதனால் சகோதர சகோதரிகளிடையே பாசப் பிணைப்பு அதிகரிக்கும். கல்வி சம்பந்தமான ஆராய்சசிகளில் ஈடுபட்டு அதற்கான பாராட்டுதல்கள் பரிசுகளை ஆகியவற்றைப் பெறுவீரகள். இலாபத்தில் இருக்கும் ராகுவினால் இயந்திரம் சம்பந்தமான வியாபாரத்தில் செல்வம் பெருகும்.

சிலருக்கு பரம்பரை தொழிலில் இலாபம் கிடைக்கும். உலக வாழ்க்கை, ஆன்மீக வாழ்க்கை இரண்டிலும் நாட்டம் அதிகரிக்கும். உங்கள் வளர்ச்சியினால் உங்கள் தந்தை சந்தோஷம் அடைவார். மன நல ஆலோசகர்களாக இருப்பவர்களுக்கு நற்பெயர் கிடைக்கும். குறிப்பாக மருத்துவ தொழிலில் இருப்பவர்களுக்கு ஆதாயம் கிடைக்கும்.

கலைஞர்கள் ரசிகர்களால் போற்றப்படுவார்கள். மாணவர்களுக்கு பரிசுகளும் பாராட்டுதல்களும் கிடைக்கும்.

சந்திராஷ்டம் தினங்கள்: மார்ச் 07, 08, 09

பரிகாரம்: சூரிய ஆராதனையும், சுப்பிரமணிய ஆராதனையும் செய்யுங்கள்.

### கும்பம்:

(அவிட்டம் 3, 4, ஸதயம், பூரட்டாதி 1, 2, 3) எதிலும் முழுமையாக ஈடுபடும கும்ப ராசி வாசகர்களே ராசியில் சூரியன், இரண்டாமிடத்தில் புதன், மூன்றாமிடத்தில் சந்திரன், குரு, சுக்கிரன், நான்காமிடத்தில் கேது, ஏழாமிடத்தில் செவ்வாய், ஒன்பாதமிடத்தில் சனி, பத்தாமிடத்தில் ராகு என கிரக இயக்கம் காணப்படுகிறது. 12ஆம் திகதி புதன் உங்கள் ராசிக்கும், 14ஆம் திகதி சூரியன் உங்கள் ராசியிலிருந்து மீனத்திற்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

ராசிநாதன் சனி சுக்கிரன் வீட்டில் அமர அவரை யோககாரரான சுக்கிரன் பார்க்க மிகவும் சாதகமான நிலையில் உள்ளது. எனினும் ராசியில் சூரியன் இருப்பது உகந்த இடமல்ல. எனவே உடல்நலத்தில் கவனம் தேவை. குடும்பஸதானத்தில் அஷ்டமாதிபதி புதன் இருக்க அவரை செவ்வாய் பார்ப்பதும் குடும்பத்தில் உள்ளவர்களுடன் ஒத்துப்போக வேண்டியதை காட்டுகிறது. மூன்றாமிடத்தில் குரு இருப்பதால் சகோதர சகோதரிகளுடன் உறவு சிறக்கும். உடன்பிறந்தவர்களுக்கு உயர் பதவி கிடைக்கும்.

மன உறுதி அதிகரிக்கும். பயணத்தில் ஆர்வம் அதிகரிக்கும். பாராட்டுகளும் விருதுகளும் கிடைக்கும். மத நம்பிக்கை அதிகரிக்கும். ஆன்மீக நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். அவர்களுக்கு புதிய வாகனம் வாங்கி கொடுப்பீர்கள். புதிய உத்தியோகம் கிடைக்கும். உங்கள் தொழில் மூலம் பணவரவு அதிகரிக்கும். ஏழில் இருக்கும் செவ்வாயால் எதிரிகள் உங்கள் முன் அடங்குவர். செம்பு, தங்க வியாபாரிகள் பெருத்த இலாபம் அடைவர்.

கலைத்துறையில் உள்ளவர்களுக்கு வெளிநாடு பயணங்களால் பணவரவு அதிகரிக்கும். மாணவர்கள் படிப்பில் கவனத்தை செலுத்த வேண்டியது அவசியம்.

சந்திராஷ்டம் தினங்கள்: மார்ச் 09, 10, 11

பரிகாரம்: சனிபகவானுக்கு விளக்கு ஏற்றுவதும், ஊனமுற்றவர்களுக்கு உதவிகள் செய்வது நன்மையைத் தரும்.

### மீனம்:

(பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி) நட்புக்காக உதவிகள் புரியும் மீன ராசி வாசகர்களே ராசியில் புதன், இரண்டாமிடத்தில் சந்திரன், ராசிநாதன் குரு, சுக்கிரன், மூன்றாமிடத்தில் கேது, ஆறாமிடத்தில் செவ்வாய், எட்டாமிடத்தில் சனி, ஒன்பதாமிடத்தில் ராகு, பன்னிரெண்டாமிடத்தில் சூரியன் என கிரக நிலை உள்ளது. 12ஆம் திகதி புதன் உங்கள் ராசியிலிருந்து கும்பத்திற்கும், 14ஆம் திகதி சூரியன் உங்கள் ராசிக்கும் பெயர்ச்சி ஆகின்றனர்.

ராசிநாதன் குரு இரண்டில் அமர ராசியை செவ்வாய் பார்க்க குடும்பத்தில் உங்களுக்கு பெரிய பொறுப்பு தேடி வரும். உடல்நலத்தில் சிறு குறைபாடு வரலாம். இரண்டாம் .வீடு பத்தாம் வீட்டிற்கு ஐந்தாம் வீடாக அமைவதால் நாவன்மையால் உங்கள் வேலைகளை சாதித்துக் கொள்வீர்கள். எனினும் குடும்ப ஸ்தானத்தை சனி பார்ப்பது சிறிய அளவிலான குழப்பத்தை தரலாம். ஆன்மீக சொற்பொழிவுகள், உபன்யாசங்கள் செய்வோருக்கு உகந்த காலமாகும்.

பத்தாம் வீட்டை குரு பார்ப்பதால் அரசாங்கத்தால் அனுகூலம் ஏற்படும். உடன்பிறந்த ஒருவருக்கு உங்களால் யோகம் கிடைக்கும். உங்களால் உங்களுக்கு பெருமையும் செல்வமும் கிடைக்கும். வாகன வழிகளில் விரையம் ஏற்படலாம். நிலம் வீடு வாகனம் வாங்கும் போது கவனம் தேவை. முதலீடுகள் செய்யும் போதும் கவனத்துடன் செய்யவும்.

பிள்ளைகளின் மேல் மிக எச்சரிக்கையாக இருக்கவும். தந்தையாருடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எதிரிகளின் தொல்லைகள், கடன்சுமைகள் அடங்கும். தாய் மாமனால் அனுகூலம் கிடைக்கும். தடைபட்டிருந்த திருமணம் இனிதே நடைபெறும். வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும்.

கலைத்துறையினருக்கு பொருளும் புகழும் கூடும். மாணவர்கள் கல்வியில் சாதனைகள் படைப்பர்.

சந்திராஷ்டம தினங்கள்: மார்ச் 11, 12, 13

பரிகாரம்: சனீஸ்வரரை வலம் வாருங்கள். தினமும் சிவாலயத்திற்கு சென்று வாருங்கள்.

(மிகுதி நாளைய தினமுரசில்)

# வெற்றியின் விளிம்பிற்கு சென்று தோல்வியைத் தழுவிய இலங்கை



சி.பீ. கிண்ண முக்கோண தொடரில் இலங்கை மற்றும் அவுஸ்ரேலிய அணிகள் மோதிய நேற்றைய முதலாவது இறுதிப் போட்டியில் இலங்கை அணி இறுதி வரை போராடிய போதிலும் தோல்வியைத் தழுவிக் கொணடது.

322 என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 49.2 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 306 ஓட்டங்களைப் பெற்று 15 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 321 ஓட்டங்களைப் பெற்றது.

அவுஸ்ரேலிய அணி சார்பில் அபாரமாக ஆடிய டேவிட் வோர்னர் 163 ஓட்டங்களைப் பெற்றதோடு மெத்திவ் வட் 64 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் பிரசாத் 2, மலிங்க, குலசேகர, ம:.றூப் மற்றும் ரங்கன ஹேரத் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இலங்கை அணி 31 ஆவது ஓவரில் 144 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது 6 ஆவது விக்கெட்டையும் இழந்து கடும் நெருக்கடிக்குள்ளானது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய அணித்தலைவர் மஹேல ஜயவர்தன 14 ஓட்டங்களுடனும் திலகரட்ன டில்ஷான் 27 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். குமார் சங்கக்கார 42 ஓட்டங்களைப் பெற்றார். தினேஷ் சந்திமால், லஹிரு திரிமாண்ண ஆகியோர் தலா 14 ஓட்டங்களுடனும் பர்வீஸ் மஹருவ் 8 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

அதன்பின் உபுல் தரங்கவும் நுவன் குலசேகரவும் 7 ஆவது விக்கெட்டுக்கான இணைப்பாட்டமாக 104 ஓட்டங்களைப் பெற்றனர். நுவன் குலசேகர 43 பந்துகளில் 3 சிக்ஸர்கள், 7 பௌண்டரிகள் உட்பட 73 ஓட்டங்களைப் பெற்றார். 112 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடிய அவர் பெற்ற அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். உபுல் தரங்க 68 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்றார்.

இவர்களின் சிறந்த துடுப்பாட்டத்தினால் இலங்கை அணி வெற்றியின் விளிம்பை நெருங்கியது. கடைசி இரு ஓவர்களில் ஒரு விக்கெட் கைவசமிருந்த நிலையில் 20 ஓட்டங்கள் இலங்கை அணிக்குத் தேவைப்பட்டன. 49 ஆவது ஓவரில் 4 ஓட்டங்களை மாத்திரம் அவ்வணி பெற்றது. அதனால் இறுதி ஓவரில் 16 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனினும் அந்த ஓவரின் 2 ஆவது பந்துவீச்சில் மலிங்க ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். தம்மிக பிரசாத் 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களைப் பெற்றார்.

அவுஸ்ரேலிய பந்துவீச்சாளர்களில் டேவிட் ஹஸி 43 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். ஷேன் வட்சன் 33 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், பிரெட் லீ 59 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

டேவிட் வோர்னர் இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராகத் தெரிவானார்.

இவ்விரு அணிகளுக்கிடையிலான 3 போட்டிகள் கொண்ட இறுதிப்போட்டித் தொடரின் இரண்டாவது போட்டி நாளை அடிலெய்ட் நகரில் நடைபெறவுள்ளது. அப்போட்டியில் இலங்கை அணி வென்றால் மூன்றாவது போட்டி மார்ச் 8 ஆம் திகதி அடிலெய்ட்டில் நடைபெறும்.

எனினும் இரண்டாவது போட்டியிலும் அவுஸ்ரேலிய அணி வென்றால் அவ்வணிக்கு சம்பியன் கிண்ணம் வழங்கப்படும், அப்போது மூன்றாவது போட்டி நடைபெற மாட்டாது என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

கூறப்படும் யுத்தக் குற்றச்சாட்டு மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அரசாங்கம் பொறுப்புக்கூற வேண்டுமென சர்வதேச மன்னிப்புச்சபை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இந்நிலையிலேயே இலங்கை தொடர்பில் விவாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது,

அத்துடன் இலங்கையின் மனித உரிமைகள் நிலை என்ற தலைப்பில் ஆசிய போரம் எனப்படும் மனித உரிமைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஆசிய அமைப்பு விஷேட நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது. அனைத்து வகையான பாகுபாடுகள் மற்றும் இனவாதத்திற்கெதிரான சர்வதேச அமைப்பு இந்நிகழ்வுக்கு இணை அனுசரணை வழங்கவுள்ளது. இக்கூட்டத்திலும் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து விவாதிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## வெளியுறவுக்....

எந்த அரசியல் கட்சிகளும் தலையிடுவதில்லை. விடுதலைப் புலிகளுடான இறுதிக்கட்டப் போரின்போது மனிதஉரிமை மீறல்கள் நடைபெற்றதாகக் கூறி இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானம் கொண்டுவரப்படவுள்ள நிலையில் இது குறித்து இந்திய அரசு எத்தகைய நிலைப்பாட்டை எடுக்கப் போகிறது எனும் கேள்வி எழுந்துள்ளது.

இறுதிக்கட்டப் போரில் இலங்கைத் தமிழர்களுக்கு எதிராக மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளதாகவும் இது குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என்றும் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பிரச்சினை ஐ.நா. பேரவையில் விவாதத்திற்கு வரும்போது இந்திய அரசு நியாயமான முடிவை மேற்கொள்ளும் என்று பாரதிய ஜனதா கட்சி கருதுவதாகவும் அத் தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். இந்திய அரசியல் கட்சிகள் மத்திய அரசு எடுக்கும் வெளியுறவு தொடர்பான கொள்கைகள் மற்றும் முடிவுகளில் தலையிடுவதில்லை. நாடு சுதந்திரம் பெற்ற நாள்முதற்கொண்டு இத்தகைய நடைமுறையைத்தான் இந்திய அரசியல் கட்சிகள் இதுவரை பின்பற்றி வந்துள்ளன.

அதேபோல் இலங்கையில் நடைபெற்ற இறுதிக்கட்டப் போரின்போது நிகழ்ந்ததாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐ.நா. சபையில் கொண்டுவரப்பட உள்ள தீர்மானம் குறித்தும் மத்திய அரசு முடிவை எடுக்கும். இம்முடிவுதான் உறுதியானது. இந்த விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி எந்தவகையிலும் தலையிடாது என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

## சிறுமி படுகொலை....

யே.ஜெயகதீஸ்வரன் என்பவராவார்.

குறித்த நபர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த வேளை அவரைத் தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரி அப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டமொன்றையும் நடத்தியுள்ளனர். இதனால் நெடுந்தீவில் நேற்றைய தினம் கடும் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இவர் மிக அண்மையில் இரண்டு பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இதன்போது இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய நிலையில் தினமும் பொலிஸ் நிலையத்தில் கையெழுத்து போடுகின்றார்.

இதேவேளை கொலையுண்ட சிறுமியின் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை நடத்துவதற்காக நேற்றுக் காலை ஊர்காவற்றுறை நீதவான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி சிவரூபன் ஆகியோர் நெடுந்தீவு சென்றனர். இவர்கள் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டதுடன், பிரேத பரிசோதனையையும் நடத்திய பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

6 ஆம் வட்டாரத்தை சேர்ந்த குறித்த சிறுமி நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்று வருவதுடன் ஈ.பி.டிபி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின், (உதயன்) அவர்களின் குடும்ப உறவினருமாவார். நேற்று முன்தினம் காலை சந்தைக்கு சென்ற நிலையில் மாலை வரை வீடு வராத நிலையில் 8 ஆம் வட்டாரத்திலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு அருகிலுள்ள காணியில் இவர் சடலமாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டார்.

## விசுவமடுவில்...

எடுத்து வந்து சிறுவனிடம் கொடுத்துள்ளார்.

குண்டு வெடிக்கும் எறிய வேண்டாம் என அருகில் இருந்த சகோதரி கூறியதைக் கேட்காத சிறுவன் குறித்த குண்டை நிலத்தில் வீசிய வேளை அது வெடித்துள்ளது. இதனால் அங்கிருந்த சகோதரியும், குறித்த சிறுவனும் படுகாயமடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு வந்த தேராவில் இராணுவ அதிகாரி, இராணுவ அம்புலன்ஸ் மூலம் தர்மபுரம் வைத்தியசாலைக்கு இருவரையும் எடுத்துச் சென்று அங்கு முதலுதவி அளிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சையளிக்கப்பட்டு வருகிறது. (எஸ்)

# கோண்டாவிலில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் பகுதியிலுள்ள உணவகம் ஒன்றில் கதவின் பூட்டை உடைத்து உள்ளே புகுந்த திருடர்கள் 25 ஆயிரம் ரூபா பெறுமதியான மின் அடுப்பு மற்றும் 25 ஆயிரம் ரூபா பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

குறித்த உணவக உரிமையாளர் இரவு 10.00 மணியளவில் கடையைப் பூட்டி விட்டு காலை கடைக்கு வந்து பார்த்தபொழுது இத்திருட்டு இடம்பெற்றிருப்பதை அவதானித்ததுடன், திருடர்கள் மின் அடுப்பையும் குபேரன் கண்ணாடிப் பெட்டியில் இருந்த 25 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றமை தெரியவந்தது.

இதனையடுத்து கடை உரிமையாளர் திருட்டு தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து கோப்பாய் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (112)

## புதிய...

புதிய கட்சியை அமைப்பது குறித்த இறுதிக் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் படைவீரர்களையும் கட்சியில் இணைத்துக் கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

## ஈனச்செயல்...

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பயங்கரவாதத்திலிருந்து விடுபட்ட மக்கள் சுமுகமான வாழ்க்கையில் ஈடுபட்டு வரும் சந்தர்ப்பத்தில் இத்தகைய ஈனத்தனமான நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் அவநம்பிக்கைகளை உருவாக்கவே வழிவகுக்கும். இதுபோன்ற கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் மீது பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், படுகொலை செய்யப்பட்ட சிறுமியின் பெற்றோரினது துயரத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியும் பங்குகொள்கிறது.

சட்டவிரோத மதுவிற்பனை நிலையங்களையும் போதைப்பொருள் விற்பனையாளர்களையும் இனங்கண்டு அத்தகையவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு பொலிஸாரும் மக்கள் மத்தியில் செயற்படும் சமூக அமைப்புக்களும் ஒருங்கிணைந்து செயற்படுவதன் மூலமே எதிர்காலத்தில் இத்தகைய சமூக சீர்கேடுகளையும் படுகொலைச் சம்பவங்களையும் தடுத்து நிறுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மனித உரிமைக்...

உட்பட அனைவருக்கும் தெரிவித்துள்ளோம். ஐ.நா. சபையின் உறுப்புரிமை பெற்ற நாடுகள் மட்டுமே இந்த மனித உரிமைகள் விவாதத்தில் கலந்துகொள்ள முடியும். நாம் ஒரு அரசியல் கட்சி. மக்களுடைய ஆணை பெற்றவர்கள். ஆனால் எமக்கு ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்கான அனுமதி வழங்கப்படமாட்டாது.

இதன் காரணமாகத்தான் நாம் ஐ.நா. வின் ஜெனிவா நிகழ்வுகளுக்குச் செல்லவில்லை. இதேவேளை நாம் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளோம். நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய நாடுகளுடன் மேற்கொண்ட தொடர்புகள் காரணமாக அரசும் ஜனாதிபதியும் பெரும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். இராஜதந்திரிகள் தூதுவர்களுடன் நாம் தற்போதும்கூட தொடர்புகளைப் பேணியே வருகின்றோம்.

ஜெனிவாவில் தற்போது என்ன நடக்கின்றது, என்ன செய்ய வேண்டும் என்பதையெல்லாம் அறிந்து நாம் உரிய முறையில் தொடர்புகளைப் பேண நடவடிக்கைகளையும் மேற்கொண்டே உள்ளோம். இதனையிட்டு யாரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. நாம் என்றும் உரிய பாதையில் சரியாக செயற்படுவோம். நாம் எமது விடுதலையைப் பெற்றே தீருவோம். இதனையிட்டு யாரும் குழப்பம் அடையத் தேவையில்லை. மக்களை இதனைக் கூறி குழப்புபவர்கள் சம்பந்தமாக விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

## அத்துமீறும் மீனவர்...

இந்தியாவின் கடல்வளம் முற்றாக அழிக்கப்பட்டு வரும் நிலையில் தடைசெய்யப்பட்டுள்ள றோலர் மீன்பிடியை குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் இந்திய மீனவர்கள் மேற்கொள்வதனால் இலங்கை கடல்வளம் மட்டுமல்லாது இலங்கை மக்களது வாழ்வாதாரமும் முற்றாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது.

எனவே தடைசெய்யப்பட்ட றோலர் மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. எல்லை தாண்டிய இழுவைப்படகு தொழில்முறை முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். இந்திய - இலங்கை அரசுகளும் இருதரப்பு கடற்றொழிலாளர்களும் கலந்துரையாடுவதன் மூலமே மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். கடந்த ஆண்டு நடைபெற்று முடிந்த சார்க் மாநாட்டின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடியிருந்தார்.

மீனவர் பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக இருநாட்டு கடற்படையினரும் கூட்டு ரோந்து நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பில் இருநாட்டு அரசுகளுக்கும் பரிந்துரை செய்யவுள்ளேன். இந்தியாவுக்கும் இலங்கைக்கும் தொப்புள் கொடி உறவு உள்ளது. அதன் பிரகாரம் இருதரப்பு மீனவர் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலை நடத்துவதன் மூலம் இப்பிரச்சினையை தீர்க்க முடியும்.

விரைவில் இந்திய மற்றும் இலங்கைத் தரப்பின் துறைசார்ந்த அமைச்சர்கள் உள்ளிட்டோருடன் கலந்துரையாடி சாதகமான தீர்வைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கை கடற்படையினரால் கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள 5 இந்திய மீனவர்களின் விடுதலை தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.


இச்சந்திப்பின் போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு இந்திய தமிழக மீனவர்கள் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர்.

இச்சந்திப்பில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்களான ரவீந்திரன், கணேசமூர்த்தி, நெடுந்தீவு பிரதேச செயலர் சிறீ மற்றும் ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கமலேந்திரன் (கமல்), நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் ரஜீவ், இராமேஸ்வரம், தங்கச்சி மடம், தனுஷ்கோடி, பாம்பொன், ஓலைக்குடா ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கப் பிரதிநிதிகளும் இலங்கையின் வடபகுதி கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

அத்துடன் பல்வேறு ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கும் அமைச்சர் விளக்கமளித்தார்.

# இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாடு தமிழருடனான உறவைப் பாதிக்கும்

## இந்தியாவை எச்சரிக்கிறது கூட்டமைப்பு



ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா எடுக்குமாயின், அது இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவில் மேலும் பாதிப்பை ஏற்படுத்தும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எச்சரித்துள்ளது.

ஜெனிவாவில் இடம்பெற்று வரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிரான பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையிலேயே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இது தொடர்பில் மேலும் கூறியுள்ளதாவது,

இலங்கையில் இடம்பெற்ற போரின்போது இலங்கையை ஆதரித்ததன் மூலம் இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையிலான உறவில் பாரிய விரிசல் ஏற்பட்டது. இந்தியா அதனைச் சரி செய்வதற்காக பல உதவிகளை வழங்க முன்வந்தபோதிலும், இருதரப்பு உறவு என்பது இன்றளவும் பாதிக்கப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இந்நிலையில், ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இம்முறையும் இலங்கையை இந்தியா ஆதரிக்குமானால், அது தமிழ் மக்களிடையேயான உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தும்.

இக்கூட்டத் தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணைக்கு இந்தியா எதிர்த்து வாக்களித்தால், அது இந்தியா மீது தமிழ் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்குத் துரோகம் இழைப்பதாகவே அமையும்.

2009 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடரில் இலங்கையைப் பிணை எடுத்து இந்தியா காப்பாற்றியது. இதற்குப் பிறகு தமிழர் விவகாரம் தொடர்பாக இந்திய இலங்கை அரசாங்கத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தியபோதும் நடைமுறையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாறாக தமிழர் விவகாரம் முன்பிருந்ததை விட மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இத்தகையதொரு நிலையில் ஐக்கிய நாடுகள் சபை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவின் 19 ஆவது கூட்டத்தொடரில் இந்தியா தமிழ் மக்களுக்குச் சாதகமான ஒரு முடிவை எடுக்கும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர். மாறாக, 2009 ஆம் ஆண்டைப் போன்று இலங்கைக்கு ஆதரவான நிலைப்பாட்டை இந்தியா எடுக்குமாயின், அது இந்தியாவுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையேயான உறவில் பாரிய விரிசலை ஏற்படுத்தும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் மேலும் எச்சரித்துள்ளார்.

# செயற்பாட்டுத் திறனுடைய பட்டதாரிகள் உருவாக்கம்

உலகின் எந்தவொரு இடத்திலும் தொழில் புரியும் வகையில் பட்டதாரிகளை உருவாக்குவதற்குத் தனியார் துறையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள உயர்கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு முதலாம் ஆண்டு முதல் செயற்பாட்டு ரீதியான பயிற்சிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன தெரிவித்துள்ளார்.

இதன்படி எந்தவொரு சூழலிலும் பணியாற்றக் கூடிய செயற்பாட்டு இயலுமையுடனான பட்டதாரிகளை உருவாக்குவதே, இதன் நோக்கம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பட்டதாரிகளை உருவாக்குவது தொடர்பில் உயர்கல்வி அமைச்சர், தனியார் துறையினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதற்கமைய பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆறு மாதங்கள் அல்லது ஒரு வருட பயிற்சிகளை வழங்கத் தனியார் துறையினர் இணங்கியுள்ளதாக உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன மேலும் தெரிவித்தார்.

# கணவனுடன் கடலில் நீராடிய போலந்து பெண் மூழ்கிப் பலி

கணவருடன் கடலில் நீராடிக்கொண்டிருந்த போலந்து நாட்டு பெண் கடலில் மூழ்கிப் பலியாகியுள்ளார். அலுத்கம - மொரகொல்ல பிரதேச கடலில் கணவருடன் நீராடிக் கொண்டிருந்த வேளையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அலுத்கம பொலிஸார் குறிப்பிட்டனர்.

சடலம் மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக நாகொட வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவத்தில் போலந்து நாட்டைச் சேர்ந்த 53 வயதுடைய எலிசபேத் வெசொலொவ்ஸ்கா என்ற பெண்ணே உயிரிழந்துள்ளார்.

# தென்னாபிரிக்க அமைச்சரை இன்று சந்திக்கிறார் பீரிஸ்

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்பு, ஒத்துழைப்பு அமைச்சர் மெய்டென்கோனா - மஸபானே ஆகியோருக்கும் இடையில் இன்று முக்கிய சந்திப்பொன்று இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசியல், பொருளாதார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தென்னாபிரிக்காவின் சர்வதேச தொடர்பு, ஒத்துழைப்பு அமைச்சருக்கு விளக்கம் அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் மெய்டென்கோனா-மஸபானே கடந்த 2009 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இலங்கை வருகை தந்திருந்தார். அதன் பின்னர் 2011 ஆம் ஆண்டு நவம்பர் மாதமும் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான மூன்று ஒத்துழைப்பு பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று முடிந்துள்ள நிலையில் இன்று மற்றுமொரு பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளது.

# நாடுகடத்தப்படுவதிலிருந்து சன் சீ கப்பல் அகதி தப்பினார்

(ரொரன்டோ)

அரசியல் தஞ்சம் கோரி எம்வி சன் சீ கப்பல் மூலமாக கனடாவைச் சென்றடைந்த இலங்கையர் ஒருவரை நாடு கடத்தும் முயற்சிகளில் கனேடிய குடிவரவு அதிகாரிகள் ஈடுபட்டு வருகின்ற நிலையில் அந்த முயற்சி தற்போது கைவிடப்பட்டுள்ளது.

கனடாவின் தேசிய பாதுகாப்புக்கு குறித்த இலங்கையர் அச்சுறுத்தலாக இருக்கிறார் என கனடா அறிவித்திருந்தது.

492 பேருடன் கனடாவை அடைந்த சன் சீ கப்பலில் பயணித்த 35 வயதுடைய சந்தீசன் அழகேந்திரன் என்பவர் கனடாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் என கனேடிய அதிகாரிகள் தெரிவித்திருந்தனர்.

சன் சீ கப்பலில் கனடா சென்றவர்களில் 15 பேர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என தெரியவந்துள்ளதாக கனடா அறிவித்துள்ளது.

புலிகளின் போக்குவரத்துச் சபையில் பஸ் மற்றும் மோட்டார் சைக்கிள் திருத்துனராக அழகேந்திரன் செயறபட்டு வந்துள்ளதாகவும் மாவீரர் தின நிகழ்வில் கலந்து கொண்டவர் எனவும் கனடா குறிப்பிட்டுள்ளது. அழகேந்திரன் இதற்கு முன்னர் தாய்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்தவராவார்.

இந்த நிலையில் அழகேந்திரன் விடுதலைப் புலிகளின் இயக்கத்துடன் நேரடி தொடர்பு கொண்டவர் அல்ல எனவும் ஆயுதப் பயிற்சி பெற்றவர் அல்ல எனவும் விடுதலைப் புலிகள் நடமாட்டம் இருந்த இடத்தில் வசித்து வந்தவர் எனவும் கனேடிய குடிவரவு அதிகாரி டக்ளஸ் கொச்ரன் குறிப்பிட்டுள்ளார்.

மாவீரர் தின நிகழ்வில் விடுதலைப் புலி உறுப்பினராக அவர் கலந்துகொள்ளவில்லை எனவும் சாதாரண பொதுமகனாகவே கலந்துகொண்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் புலிகளின் அரசியல் பிரிவில் அவர் இடம்பெற்றதற்கான சான்றுகள் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இக்கருத்துக்களை ஏற்றுக்கொண்ட கனேடிய அரசு அழகேந்திரனை நாடு கடத்தும் திட்டத்தைக் கைவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பால்மாக்களின் எண்ணிக்கை; ஆராயுமாறு பணிப்புரை

வர்த்தக சந்தையில் விற்பனையில் உள்ள பால்மாக்களின் எண்ணிக்கை தொடர்பாக ஆராயுமாறு கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தகதுறை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ, நுகர்வோர் அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பால்மாக்களின் விலைகளை அதிகரிக்குமாறு அவற்றை விநியோகிக்கும் நிறுவனங்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

அது தொடர்பாக கவனம் செலுத்துவதற்காகவே இவ்வாறு பால்மாக்களின் எண்ணிக்கையை ஆராயுமாறு அமைச்சர் பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சு செய்தி வெளியிட்டுள்ளது.

அதேவேளை, இந்த வருடம் இறுதியாக பால்மாக்கள் இறக்குமதி செய்யப்பட்ட காலம் தொடர்பாகவும், தகவல்களை ஆராயுமாறு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ நுகர்வோர் அதிகார சபை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

குறித்த தகவல்கள் திரட்டப்படும் வரை பால்மாக்களின் விலைகள் அதிகரிப்பதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது என அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இந்தநிலையில், இறக்குமதி செய்யப்பட்ட பால்மாக்களில் ஒரு கிலோகிராமுக்கு 37 ரூபாவை தாம் நட்டமாக எதிர்நோக்குவதாக பால்மா விநியோக நிறுவனங்கள் அண்மையில் தெரிவித்திருந்தன. அதனை தவிர்த்துக் கொள்வதற்கான விலையுயர்வு அவசியம் என அவைகள் நுகர்வோர் அதிகார சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

# எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிக்க சவுதி, அபுதாபியிடம் கோரிக்கை

(கொழும்பு)

ஈரானிலிருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு அமெரிக்கா தடை விதித்துள்ளதால் இலங்கைக்கான மசகு எண்ணெய் மற்றும் சுத்திரிக்கப்பட்ட எண்ணெய் ஏற்றுமதியை அதிகரிக்குமாறு சவுதி அரேபியா, அபுதாபி ஆகிய நாடுகளை சம்மதிக்கச் செய்ய முடியுமென இலங்கை நம்பிக்கை கொண்டுள்ளது.

சவுதி அரேபியாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச பெற்றோலிய நிறுவனமான ஆரம்கோ மற்றும் அபுதாபி தேசிய எண்ணெய் கம்பனி ஆகியனவற்றுடன் மேலதிக விநியோகம் தொடர்பாக பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி தெரிவித்துள்ளார். இப்பேச்சுவார்த்தைகளுக்காக பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்தவும் அடுத்த வாரம் இவ்விரு நாடுகளுக்கும் செல்லக்கூடும் என மேற்படி அதிகாரி தெரிவித்தார்.

ஈரானிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய் அளவு இவ்வருடம் குறைந்தபட்சம் 10 சதவீதத்தால் குறைவடையும் எனவும் இதனால் சர்வதேச சந்தையிலிருந்து சுத்திரிக்கப்பட்ட எண்ணெய் இறக்குமதிக்கான சாத்தியத்தை எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருடம், 1.7 பில்லியன் டொலர் செலவில் 2 மில்லியன் தொன் மசகு எண்ணெயை இலங்கை இறக்குமதி செய்தது. அவற்றில் 1.93 மில்லியன் தொன் எண்ணெய் ஈரானிலிருந்து 1.6 பில்லியன் டொல்ர் செலவில் இறக்குமதி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது உலக சந்தையின் கேள்விப்பத்திரங்களுக்கூடாக இந்தியாவின் ரிலையன்ஸ் நிறுவனத்திடமிருந்து சுத்திரிக்கப்பட்ட எண்ணெயை இலங்கை இறக்குமதி செய்கிறது. இந்நிலையில் எண்ணெய் இறக்குமதிக்கான கடன் எல்லையை விஸதரிக்குமாறு அந்நிறுவனத்தை கோருவதற்கு இலங்கை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஓமானிடமிருந்தும் இலங்கை உதவிகளை கோரியுள்ளபோதிலும் அந்நாட்டிடமிருந்து இன்னும் பதில் கிடைக்கவில்லை என அவ்வதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை, ஈரானிய எண்ணெய் நெருக்கடியானது எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தை பாதிக்கவில்லை என அதன் நிர்வாக இயக்குநர் கே.ஆர். சுரேஷ்குமார தெரிவித்தார்.

இந்நிறுவனத்துக்கான எண்ணெய் விநியோகம் ரிலையன்ஸ் மற்றும் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் நேரடியாக மேறகொள்ளப்படுவதாகவும் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தில் தமது நிறுவனம் மிக அதிகமாக தங்கியிருக்கவில்லை எனவும் அவர் கூறினார். 40 ஆயிரம் தொன் எண்ணெய் கையிருப்பில் உள்ளதாகவும் எல்.ஐ.ஓ.சி. நிறுவனத்தை பொறுத்தவரை தட்டுப்பாடு இல்லை எனவும் அவர் கூறினார்.

# முரணான கருத்துக்களை வெளியிடுகிறது அரசாங்கம்

## சோமவன்ச குற்றச்சாட்டு

அரசாங்கம் முன்னுக்கு பின் முரணான கருத்துக்களை வெளியிட்டு வருவதாக ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். சர்வதேச அரங்கில் அமைச்சர் மகிந்த சமரசிங்க ஒரு கருத்தை வெளியிடுகின்றார். ஆளும் கட்சி அமைச்சர்கள் உள்நாட்டில் வேறுவிதமான கருத்துக்களை வெளியிடுகின்றனர். இந்த அரசாங்கம் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்து செயற்படுகின்றது என்பதில் சந்தேகமில்லை. பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் அரசாங்கம் பாரிய பின்னடைவை எதிர்நோக்கி வருகின்றது. நாட்டு மக்களின் மீது, பிரச்சினைக்கு மேல் பிரசசினைகளை இந்த அரசாங்கம் திணிக்கின்றது. ஜெனிவா அமர்வுகள் தொடர்பில் மக்கள் மத்தியில் பாரியளவில் அரசாங்கம் பீதியை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 மார்ச் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.